Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU






முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 15 புதன்கிழமை (27.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 150













# கண்டனம் செய்வது மட்டுமல்ல இணைந்தும் செயற்படுவோம்

## அமெரிக்காவின் பிந்திய நிலைப்பாடு



(ஜெனிவா)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் யுத்தகால உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உருவாக்குவதற்காகவும் பொருத்தமான பொறிமுறையை உருவாக்குவதற்காக இலங்கை அரசுடன் இணைந்து செயற்படுவதற்கும் அதற்கான தொழில்நுட்ப உதவிகள் உட்பட அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கும் அமெரிக்கா தயாராக இருப்பதாக சர்வதேச நிறுவனங்களுக்கான அமெரிக்காவின் துணைச் செயலாளர் எஸ்தர் பிரிம்மர் தெரிவித்துள்ளார். யுத்தகால உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசைக் கண்டிக்கும் அதேவேளை நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக அவர்களுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா எப்போதும் தயாராக உள்ளது என்றும் அவர தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் வருடாந்த மாநாட்டில் அமெரிக்காவின் நிலைப்பாடு எப்படியாக இருக்கும் என்பதை சர்வதேச நிறுவனங்களுக்கான அமெரிக்காவின் துணைச் செயலர் எஸ்தர் பிரிம்மர் விளக்கிக்கூறும் போதே இவ்வாறு தெரிவித்தார். ஜெனிவாவில் உள்ள மனித உரிமை பேரவையின் இந்த நடப்பு அமர்வில் ஆரம்ப உரையாற்றிய

19 ஆம் பக்கம் பார்க்க

## நாய் கடித்ததால் முப்பது பேர் காயம்

யாழில் நாய்க்கடிக்கு இலக்காகிய 30 பேர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளமை யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவு புள்ளிவிபரத் தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது. யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சிறுவர்கள் உட்பட பெரியவர்கள் வரையிலான 30 பேர் நேற்று மட்டும் நாய்க்கடிக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை,கட்டாக்காலி மற்றும் வளர்ப்பு நாய்களின் கடிக்கு இலக்காகியவர்கள் தாமதிக்காது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்

19 ஆம் பக்கம் பார்க்க

## இடமாற்றத்தால் ஆசிரியர்கள் பாதிப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் 94 பேர் கையொப்பமிட்டு தமக்கான இடமாற்றத்தை வலியுறுத்தி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை நேற்று பதிவுசெய்துள்ளனர்.


இந்த முறைப்பாட்டில் 2005 ஆம் ஆண்டில் இருந்தும் அதற்கு முன்னரும் வன்னிப் பகுதிகளில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க வடமாகாணக் கல்வித் திணைக்களம் மறுத்துவருதாகக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இந்த முறைப்பாட்டை நேற்றுப் பெற்றுக்கொண்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் வடமாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாகவே அதிகமான முறைப்பாடுகள் தமது பணிமனைக்குக் கிடைத்து வருவதாகவும் இந்த முறைப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி வடமாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரியை இலங்கை மனித

19 ஆம் பக்கம் பார்க்க

## சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு

### அனுமதிக்காது கூட்டமைப்பு



வலி. வடக்கு மக்களின் காணிகளை விடுவிக்க முடியாதெனக் கூறியிருக்கும் யாழ். இராணுவத் தளபதியின் கருத்து, வடமாகாண சிவில் நிர்வாகத்தில் அதீத இராணுவத் தலையீடு இருப்பதை காட்டுவதாகவும் இதனை த.தே.கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ். பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது வலி. வடக்கு உயர்பாது காப்பு வலயத்தினுள் உள்ள பொதுமக்களுடைய நிலத்தை மக்களிடம் மீளவும் கையளிக்க முடியாதென படைத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் துப்பாக்கிச் சூடு இருவர் ஸ்தலத்தில் பலி

புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்படும் இருவர் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை, புனாணை பிரதேசத்தில் வைத்து காரொன்றை கடத்திச்செல்வதற்கு முயன்ற வேளையில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்து இவ்விருவரும் தப்பிச்சென்று விட்டனர். இதனையடுத்து திம்புலாகல பகுதியில் நேற்று மாலையில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதுடன் தப்பியோடுவதற்கு முயன்ற இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். அந்த துப்பாக்கி பிரயோகத்திலேயே இருவரும் பலியாகியுள்ளதாக பொலிஸார் நேற்று இரவு தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் கொள்ளை கோஷ்டியின் உறுப்பினர்கள் என்றும் நகைகள் மற்றும் பணங்களை கொள்ளையடித்

19 ஆம் பக்கம் பார்க்க




## இராணுவ இரகசியம் விற்பனை விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

இராணுவ இரகசியங்கள் என்று கருதப்படும் புகைப்படங்கள் மற்றும் தகவல்களை ரயில் பயணம் ஒன்றின்போது வெளிநாட்டுப் பிரஜை ஒருவருக்கு உள்ளூர் அதிகாரி ஒருவரால் விற்பனை செய்த சம்பவம் குறித்துத் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. கடந்த சனிக்கிழமை கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் பயணித்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் மடிக்கணனிக்கு தனது மடிக்கணனியிலிருந்த பல புகைப்படங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

# பெரும்போக நெல்லை சந்தைப்படுத்த வாய்ப்பு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நெற்பயிர்ச்செய்கையாளர்கள் பெரும் போகத்தில் அறுவடை செய்த நெல்லினை உரியகாலத்தில் விரைவாக சந்தைப்படுத்த முடியாது தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக நெற்செய்கையாளர்கள் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சியில் இலங்கை நெற்சந்தைப் படுத்தும் சபையினரால் நெல் கொள்வனவு செய்யும் இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு நெற்செய்கையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நெல்லை கொள்வனவு செய்யும் நெற்ச் சந்தைப்படுத்தும் சபையினரின் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்தார்.

நெற் செய்கையாளர்கள் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த ஓரிரு நாட்களுக்கு முன் வருகைதந்து காத்திருக்க வேண்டியுள்ளதாக குறிப்பிட்டனர்.

எனவே நெற்செய்கையாளர்களின் சிரமங்களை தவிர்த்து இயன்றவரை விரைவாக நெல்லினைக் கொள்வனவு செய்யும் வகையில் மேலதிகமாக நிறுத்தல் அளவை கருவிகளை வழங்கவும், இரண்டு தொழிலாளர்களை உடனடியாக பணியில் ஈடுபடுத்துவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் ஊடாக இந்த நடவடிக்கைகளுக்கு ஒழுங்குகளை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு காத்திருந்த நெற்செய்கையாளர்களிடம் மாவட்டத்தில் உற்பத்தி செய்பட்ட முழு நெல்களும் நிர்ணய விலையில் கொள்வனவு செய்யப்படுவதோடு விரைவில் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் தயாரூபன் ஆகியோரும், இலங்கை நெற் சந்தைப்படுத்தும் சபையின் முகாமையாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# "யாழ்ப்பாணம் எமது தாய்மண்"

## முஸ்லிம் ஒன்றுகூடல் ஒத்திவைப்பு

யாழ்.முஸ்லிம் மக்களின் ஒன்றுகூடல் 'யாழ்ப்பாணம் எமது தாய்மண், யாழ்ப்பாணம் எமது அடையாளம்' எனும் கருப்பொருளில் நடத்தப்படவிருந்தது. எனினும் அதற்கு முன் நடத்தவிருந்த விளையாட்டு, கலை இலக்கிய, விநோத பெண்களுக்கான கைப் பணிப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது மேற்படி போட்டிகள் ஏப்ரல் மாதம் 12ஆம், 13 ஆம், 14ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே கண்காட்சியும் மேடை நிகழ்ச்சிகளும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டம், கிரிக் கெட், சைக்கிளோட்டம், குறுந் தூர வீதியோட்டம், மரதன் ஓட்டப்போட்டிகளும், கலை இலக்கியப் போட்டிகளின் சிறுகதை, கவிதை, கட்டுரை என்பன ஆறு பிரிவுகளிலும், விநோத உடைப் போட்டி என்பனவும் நடத்தப்படவிருக்கின்றன.

யாழ்.,கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் இல.70, காதீர் அபுபக்கர் வீதி, முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# குவிகின்றன திண்மக் கழிவுகள் அகற்றப்படுவது எப்போது?

## வலி.தென்மேற்கு மக்கள் ஏக்கம்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கழிவகற்றல் செயற்பாடுகள் பற்றி சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமான சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு வீதியில் பிரதேச மக்களின் வீடுகளில் சேரும் கழிவுகள் கொட்டப்படுகிறது. இந்த கழிவுகள் நீண்டநாட்களாக அகற்றப்படாது உள்ளது. இதனால் ஆலயத்திற்குச் சொந்தமான காணி மாசடைவதுடன் டெங்கு தொற்று ஏற்படக்கூடிய நிலை உள்ளது.

எனவே இந்தக் கழிவுகளை அகற்ற உதவவேண்டும் எனக் கோரப்படுகிறது. இதன் பிரதி பிரதேசசபை தவிசாளர், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வெ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சண்டிலிப்பாய் பிரதேச மக்கள் சபை என்னும் அமைப்பினால் இப்பிரதேச கழிவகற்றல் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பிலான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (54)

# விதைநெல் வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை

## பெரும்போக பாதிப்பின் எதிரொலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவ சாயிகள் தமக்கான விதை நெல்லைப் பெற்றுத்தருமாறு பல தரப்பினரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற சீரற்ற காலநிலையால் நெல் அறுவடையை முன்னெடுக்க முடியாது போனதாகவும் அத்துடன் நெல் வெள்ளத்தில் மூழ்கிப் போனதால் எந்தவித பயனையும் அடைய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் சிறுபோக நெற்செய்கைக்கு விதை நெல் இல்லாமல் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே விவசாய கமக்கார அமைப்புக்கள் தங்களுக்கான விதை நெல்லை பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# வயோதிபரின் சடலம் அடையாளம் காணப்பட்டது

வடமராட்சி கப்பூதுப் பிரதேசத்தில் நஞ்சருந்திய நிலையில் வயோதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு நாட்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் அவரது சடலம் நேற்று உறவினர்களால் உரிமை கோரப்பட்டது.

இதில் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னர் சிதம்பிரபிள்ளை (வயது-85) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி குறித்த வயோதிபர் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் செல்வதாக உறவினர்களிடம் கூறிவிட்டுச் சென்ற சமயம் கப்பூது வெளியில் மதுசாரத்துடன் நஞ்சருந்திய நிலையில் வயோதிபர் கிடந்துள்ளார்.

இதனைக் கண்ட இராணுவத்தினர் வயேதிபரை மந்திகை ஆதார வைத்திசாலையில் அனுமதித்த நிலையில் வயோதிபர் தனது உறவினர்கள் பற்றி விபரத்தை தெரிவிக்க முடியா நிலையில் இருந்ததுடன், தொடர்ச்சியாக சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும் குறித்த வயோதிபர் 2 நாட்களின் பின் 23 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (116)

# நடராஜா மண்டபம் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராஜா ஞாபகார்த்த மண்டபம் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

மறைந்த உயர்நீதிமன்ற நீதியரசர் என்.நடராசாவின் ஞாபகார்த்தமாக அன்னாரது பாரியார் திருமதி தங்கம்மா நடராசாவினால் அவரது சொந்தக் காணியில் கலாநிதி ஆ.தியாகராசா அதிபராக இருந்த காலத்தில் கட்டப்பட்ட இந்த மண்டபம் அறுபது வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டு புத்தொளி பெற்றுள்ளது. (10)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் 2013 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது மாதாந்தக் கூட்டம் நாளை பி.ப. 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்டுள்ளது.

# வடமராட்சியில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் அவ்வவ் செயலக மாநாட்டு மண்டபங்களில் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உத யன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்படி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

மேலும் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும் நடைபெறவுள்ளது. (109,116)



யாழ்.எயிட் நிறுவனத்தால் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக பல்வேறான உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சமூக சேவையாளர்களும், பிரபல கட்டட ஒப்பந்தகாரருமாகிய பற்குணராஜா தம்பதிகள் உதவிப்பொருட்களைப் பெற்ற மாணவர்களுடன் நிற்பதனையும், திருமதி பற்குணராஜா மாணவி ஒருவருக்கு உதவிப் பொருள் வழங்குவதையும் காணலாம்.

# மாடு வெட்டத் தடை

கண்டி மாநகர சபை எல்லைக்குள் மாடுகளை இறைச்சிக்காக அறுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

கண்டி மாநகர சபைக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு மாநகர சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் மூவரும் தங்களுடைய கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

## அச்சுவேலி தெற்குப் பகுதிகளில் குரங்குகளின் வருகை அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதியில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிப்பகுதியில் உள்ள குடியிருப்புப்பகுதிகளில் அண்மை நாட்களாக குரங்குகளின் தொல்லை என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில் இவ்வாறான தொல்லைகள் எவையும் இல்லாதிருந்த நிலையில் திடீரென அப்பகுதியில் குரங்குகளின் வருகை அதிகரித்துள்ளது.

ஆட்கள் வீடுகளில் உள்ள நிலையிலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது வீடுகளினுள் புகும் குரங்குகள் வீட்டிலுள்ள பாவனைப் பொருட்களைச் சேதப்படுத்திக் கொள்வதுடன், தொலைக் காட்சி அன்ரனா மற்றும் அதன் இணைப்பு வயர்கள் என்பவற்றையும் சேதப்படுத்தி வருகின்றன.

மேலும் சமையலறைப் புகைபோக்கி துவாரத்தினூடாக உட்புகும் குரங்குகள் சமையலறையிலுள்ள உணவுப் பண்டங்களை உண்பதுடன் அவற்றை சிதறி எறிந்து சேதப்படுத்தியும் வருகின்றன.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றின் வெளி வராந்தாவில் வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலை பேசியினை குரங்கு தூக்கிச் செல்வதைக் கண்ட வீட்டார் குரங்கி னைத் துரத்திச் சென்றபோது பல மீற்றர் தூரத்திற்கு அப்பால் அதனை வீசி எறிந்து விட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறான குரங்குச் சேட்டைகளினால் அப்பகுதி மக்கள் மிகவும் உசாரடைந்துள்ளனர். மேலும் இக்குரங்குகள் தென்மராட்சிப பகுதியிலிருந்து இங்கு வநிதிருக்கக்கூடும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கினறனர். (03)

### கிளிநொச்சி - முல்லைத்தீவில்

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது தொடர்ச்சியாக தீவிர நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக மது உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட பலர் மதுவரித்திணைக்களத்தினால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்ட விரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அதிகரித்துள்ள நிலையில், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும், மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் தொடர்ச்சியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் கிளிநொச்சிப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 10 பேரை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளனர். மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வருடம் ஜனவரி மாதம் 40 இற்கு மேற்பட்டவர்கள் மதுவரித்திணைக் களத்தினால் சட்ட நடவடிக் கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக சட்டவிரோத கசிப்பு நடவடிக் கைகளில் ஈடுபடுவோர் கண் காணிக்கப்பட்டு வருவதால் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவது தவிர்க்கப்படுவதுடன் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாகவும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப் படுகிறது. (கே)

## 16 மாணவர்களுக்கு தளபாட வசதிகள்

பூநகரி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் போரினால் தமது தாய், தந்தை இருவரையும் இழந்த 16 மாணவர்களுக்கு கனடாவில் இயங்கும் 'பூநகரி கனடா சமூக அபிவிருத்திச் சங்க'த்தின் சார்பில் அவர்கள் நிதியிலிருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரை, மேசைகள் அண்மையில் வழங்கப்பட்டது.

போரினால் தாய், தந்தையரையும், தமது உடைமைகளையும் இழந்த நிலையில், தாம் இருந்து படிப்பதற்கேற்ற உபகரணங்களை வழங்கி உதவுமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்று பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினூடாக இவ்வுதவி கிடைத்துள்ளதாக பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தெரிவித்தார். (112)

### உறுப்பினர்சபைக் கூட்டம்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான சபைக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மானிப்பாய் பிப்பிலி மயான அபிவிருத்தி, நிலையியல் உபகுழுக்கள் அமைத்தல் மற்றும் அட்டவணைப் படுத்தப்படாத ஆளணி விடயம் போன்ற பல விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது. (54)

## வவுனியா பொலிஸாரின் பணிகள் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா - கூமாங்குளத்தில் அமைந்துள்ள மதுபானசாலையொன்றில் இளைஞர்களுடன் சண்டையிட்டமை தொடர்பில் நான்கு பொலிஸார் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் கூமாங்குளத்தில் அமைந்துள்ள மதுபானசாலையில் வைத்து பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ள நிலையில் இரு பொலிஸாரும் இரு இளைஞர்களும் அன்று மாலை காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் கடமை நேரத்தில் இவர்கள் வெளியில் சென்றமை மற்றும் இளைஞர்களுடன் மது நிலையத்தில் தகராறில் ஈடுபட்டமையை கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் முதல் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. (160)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தீவுப்பகுதிக்கான ஒருங்கிணைப்புக்குழுவினது தலைவரும் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில் வெஸ்திரி அலென்ரின் (உதயன்) தலைமையில் இடம்பெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் தீவகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. சுகாதாரம், நீர் விநியோகங்கள், கல்வி, வீதி அபிவிருத்திகள், போக்குவரத்து, மின் விநியோகங்கள், கால்நடை, மீன்பிடி, விவசாயம், பனை அபிவிருத்தி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினது பங்களிப்புக்கள் என்பன பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (05)

## பேருந்துத் தரிப்பிடம் இல்லை: மாணவர்கள் அவலம்

(முழங்காவில்)

பூநகரியின் கேந்திர நிலையமான வாடியடி நகர்ப்பகுதியில் பாடசாலை மாணவர்கள், மக்கள் நலன் கருதி பேருந்துத் தரிப்பிடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பூநகரியின் பிரதேச சபை நிர்வாகத்திடம் கடந்த பல மாதங்களுக்கு முன் கோரிக்கை விடப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட இச்சபைக் கூட்டத்தில் பேருந்துத்தரிப்பிடம் அமைப்பது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 8 மாதம் கடந்த நிலையில், எதுவித நடவடிக்கையும் எடுக்காத அசமந்தப் போக்கில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் செல்லும் பயணிகளும் வெயிலிலும், மழையிலும் பாதிக்கப்படுவதாக இப்பகுதி வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர் (112)



இலங்கை சின்மியா மிஷன் நடாத்திய நல்லூர் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான 'வாழ்க்கை விளையாட்டு' விழுமியக் கல்வி தொடர்பான வதிவிடப் பயிற்சி முகாம் ஸ்ரான்லி கல்லூரியில் நடைபெற்றபோது, யாழ்.சின்மியா மிஷன் சுவாமிகள் பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்யா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம். (10)

## காணாமற் போன சிறுவன் மகசீன் சிறையில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமற் போன சிறுவன் ஒருவன் கொழும்பு மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென அச்சிறுவனின் பெற்றோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் கடந்த வருடம் யூலை மாதம் காணாமற் போயிருந்த நிலையில் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக் கப்பட்டான். அதன் பின்னரும் ஒரு தடவை காணாமற் போய் பின்னர் ஒப்படைக்கப்பட்டான். இச்சிறுவன் இரும்பு பொறுக்கி விற்றபோதே இவ்வாறு காணாமற் போனதாகப் பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி மேற்படி சிறுவன் காணாமற் போயிருந்த நிலையில் கொழும்பில் வைத்து குறித்த சிறுவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதெனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவனை விடுதலை செய்வதற்கு சட்டத்தரணிகள் மூலம் வழக்காட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் இச்சிறுவனின் விடுதலை குறித்து நடவடிக்கை எடுக்க தெரிவித்திருப்பதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனினும், இவ்வாறு சிறுவர்கள் காணாமல் போவதற்குப் பெற்றோர்களின் கவனயீனமும் அக்கறையின்மையுமே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (கே)

## மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதிப் புனரமைப்பை துரிதப்படுத்துக

(மாங்குளம்)

மாங்குளத்தில் இருந்து வெள்ளாங்குளம் வரை செல்லும் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றது.

இதனால் இவ்வீதியின் ஊடான போக்குவரத்தினை மேற்கொள்வதில் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியின் ஊடாக துணுக்காய், மல்லாவி, கொத்தம்பியார் குளம் போன்ற தூரப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்கின்றன. பல மணி நேரம் வீதித் தடைகள் போடப்படுவதனால் மக்கள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் நீண்ட நேரம் வெயிலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என தூரப்பிரதேசங்களுக்குச் செல்பவர்கள் இவ்வாறு பாதிக் கப்படுகின்றனர்.

இவ்வேலைத்திட்டம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் மந்த கதியில் இழுத்தடிக்கப்படுவதுடன், மாங்குளத்தில் இருந்து வன்னிவிளாங்குளம் வரை உள்ள 3 கிலோமீற்றர் நீளமான அளவிற்கே காபெற்றாக மாற்றப்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (15)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பேசுவது அவர்கள், நாறுவது நாங்கள்!

சிலருக்கு, இந்த உலகில் தாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கு மானசீகமாகவேனும் எதிரிகள் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்று யாரோ சொல்லியிருப்பது நம் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோருக்கு மிகக் கச்சிதமாகவே பொருந்துகிறது.

சமீபத்தில் போயிருந்த ஒரு கூட்டத்தில் நம்மைப் பதற்றமடைய வைக்கும் ஒரு வீர முழக்கத்தைக் கேட்க நேர்ந்தது. "என்னதான் எதிர்ப்பு வந்தபோதும் நாங்கள் தனியரசை நிறுவியே தீருவோம்" என்று அந்தப் பேச்சாளர் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் ஒன்றும் சாதாரண நபர் அல்ல; தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்.

கூட்டத்திலிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பிப் புல்லரித்துக் கொண்டதைப் பார்த்தபோது மேலும் பதற்றமாக இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கூட்டங்களில் எல்லாம் அவர்கள் இப்படித்தானே பேசிவருகிறார்கள் என்று கூடவந்த நண்பர் சொன்னார். அதிர்ச்சியாக இருந்தது. எந்த அடிப்படையில் மக்களிடம் மீண்டும் இந்த நம்பிக்கையை ஊட்ட முயல்கிறார்கள்? அதற்கான நம்பிக்கைகள் எதையேனும் இவர்கள் உண்மையிலேயே கொண்டிருக்கிறார்கள் தானா என்று குழப்பமாகவும் இருந்தது.

அட, இந்தத் தலைமுறையிலேதானே தனிநாட்டுக் கனவையும், உலகையே எதிர்த்து வெல்லும் வீரவசனங்களையும் இவர்கள் சொல்லக் கேட்டுக் கேட்டு இத்தனை அவலங்களையும் மக்கள் தலையில் சுமந்தார்கள்? அது ஒன்றும் எப்பவோ நடந்த பழங்காலத்தைய கதை இல்லையே! அத்தனை வீரப்பேச்சுக்களாலும் மக்களை அழிவுக்கு வழிநடத்தித் தள்ளிவிட்டுத் தாங்கள் தப்பிக்கொண்டது, இதோ இப்போதும் அதே பேச்சைப் பேசிக் கொண்டிருக்கும் இதே தலைவர்கள்தானே?

தனிநாடு எந்த வகையில் சாத்தியம்? எப்போது சாத்தியம்? யாரால் சாத்தியம்? இது ஒன்றையும் மக்கள் இவர்களிடமோ அல்லது தங்களைத் தாங்களேயோ கேட்டுக்கொள்ள மாட்டார்களா? இந்த நாட்டுக்குள்ளே மற்ற சமூகத்தவர்களோடு சேர்ந்துதான் நாம் வாழ்ந்தாக வேண்டும் என்ற யதார்த்தம் பற்றி எமது மக்கள் நினைத்தேவிடக் கூடாது என்று இத்தகைய பொய்யான மாயைகளை வளர்ப்பது கடைந்தெடுத்த சுயநலமும் வஞ்சக ஏமாற்றும் இல்லையா?

வாழ்க்கைக் கஷ்டங்கள் எவையுமில்லாமல், இந்த வீர இறுமாப்பு வசனங்களோடு திருப்தியடைந்து கொண்டிருப்பவர்கள் தமிழ்மக்களில் எத்தனை பேர்? எத்தனை நூற்றாண்டு கழித்தாவது தனிநாடு வரட்டும்; அதுவரைக்கும் இப்படியே சும்மா சவால் விட்டு மிரட்டிக்கொண்டிருப்பதில் கிடைக்கும் 'நடப்பை' அனுபவித்துக் கொண்டிருக்கலாம் என்று நம்மில் எத்தனை பேர் யோசிக்கிறார்கள்?

அரசாங்கம் திணறுகிறது, கவிழப் போகிறது, இதோ சர்வதேசச் சிறைக்குப் போகப் போகிறது என்றெல்லாம் நாம் பூரிப்பதும், தனித்துவ இனமான நாங்கள் யாருடனும் சேர்ந்து வாழமாட்டோம் என்று நம்மாட்களின் வீரப்பேச்சுக்களைக் கேட்டு இறும்பூதடைவதுமாக எவ்வளவு காலத்திற்கு இருக்கப் போகிறோம்?

அப்படி ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் யாரும், அன்றாட வாழ்வை ஓட்டுவதற்கே பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நம்மைப் போன்ற சாதாரண மக்கள் அல்ல. அவர்கள் இந்தப் பேச்சுக்களால் உருவாகப் போகும் எந்தக் கஷ்டங்களையும் அவலங்களையும் அனுபவிக்காத வேறு பிரிவினர். எல்லா வசதிகளும் வாய்த்திருப்பதால், ரோசப் பேச்சுக்கள் மூலம் பகையையும் வெறுப்பையும் வளர்த்துவிட்டுக் கொண்டிருப்பவர்கள். மோதலையும் சண்டையையும் உருவாக்கிவிட்டு, நிலைமை ஆபத்தாகிறது என்று தெரிந்தால் எங்காவது பாய்ந்து தப்பியோடிவிடக் கூடிய வசதியுள்ளவர்கள்.

அழிவு முடிந்தபின் மீண்டும் வந்து அதே வீரவசனங்களைத் தொடங்கி விடுவதில் வெட்கமோ குற்றவுணர்ச்சியோ கொள்ளாதவர்கள்.

\- ஆசிரியர்

# ஆயுர்வேத வைத்தியரின் மரணம் குறித்து முறையான விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய வைத்திய சாலையில் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத் தெரிவித்துள்ளார். கடந்த 23 ஆம் திகதி எம்பிலிப் பிட்டிய ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட வைத்தியர் ஒருவரை, மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற முற்பட்டனர்.

எனினும் வைத்தியரை ஏற்றிச்சென்ற அம்புலன்ஸ் வண்டியில் பொறுப்புமிக்க அதிகாரிகள் எவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கொழும்புக்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கையில் குறித்த வைத்தியரின் நிலைமை மோசமானதால் அம்புலன்ஸில் இருந்தவர்கள் அவரை கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு தேவையான சிகிச்சைகளை வழங்கி குறித்த வைத்தியரை எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது, அவர் உயிரிழந்துள்ளார்.

இது இயற்கையான மரணம் எனினும், இதற்கு வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் கவனயீனமே காரணம் என தெரியவந்துள்ளதாக, சம்பவம் தொடர்பில் மரண விசாரணைகளை மேற்கொண்ட எம்பிலிப்பிட்டிய நகர் திடீர் மரண விசாரணை அதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பிலான பரிசோதனை அறிக்கையை தமக்கு பெற்றுத் தருமாறு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் குறித்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

ரத்னபுர பிரதேசத்தின் சுகாதார சேவை அத்தியட்சகர் மற்றும் மாகாண சுகாதார அமைச்சரின் உதவிச் செயலாளர் உள்ளிட்டோர் அடங்கிய விசேட செயற்குழு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# சாதனையாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாண கிளையினால் சாதனையாளர் கௌரவிப்பும், பயனாளிகள் நலன் பேண் நிகழ்வும் இன்று காலை 9.30 மணிக்கு பலாலி வீதி, கோண்டாவில் சந்தியிலுள்ள சேவாலங்கா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளன கிளைத்தலைவர் இ.கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி த.திரிபுவனசுந்தரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே. இரத்தினகுமார், காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான ஆதீனகர்த்தா கே.சோமசேகரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். வரவேற்புரையை இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன பொருளாளர் து.யசிந்தன் வழங்கவுள்ளதுடன் பயனாளிகளுக்கான கடன் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (54)

# காலபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

(மன்னார்)

மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட விவசாயிகள், மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். மன்னார் – முருங்கன் செம்மண் தீவு விளையாட்டு மைதானத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் அரசியல் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், விவசாயிகள் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

போராட்டத்தின் இறுதியில், விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திரவிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த யுத்த பேரழிவின் போது மோசமான இழப்புக்களுக்கும், பின்னடைவுகளுக்கும் முகம் கொடுத்த வன்னி பெருநிலப்பரப்பின் ஒருபகுதியினர் மன்னார் மாவட்ட விவசாயிகளாவர். 2006 ஆம் ஆண்டு கால போக அறுவடை நெருங்கிய காலப்பகுதியில் யுத்தம் தீவிரமடைந்தால் விவசாயத்தில் பெருமளவு முதலீட்டைச் செலவிட்ட நாம் அதனைப்பெற, அறுவடை செய்ய முடியாது அவற்றை முழுமையாக கைவிட்டு இடம்பெயர வேண்டிய அவலத்திற்குள்ளானோம்.

வங்கிகளிடமும், தனியாரிடமும் விவசாயத்திற்காக பெறப்பட்ட கடன்கள் மீளச்செலுத்த முடியாமலும், விவசாய செலவுக்காக அடகு வைத்த நகைகள் மீட்கமுடியாமலும், உள்ளன. 2010 இல் மீள்குடியமர்த்தப்பட்ட நாம் முதலீடு எதுவும் இல்லாமையால் அவ்வாண்டு காலபோகச் செய்கையில் ஈடுபட முடியாத அவலத்திற்கு உள்ளானோம். எனினும் 2011 ஆம் ஆண்டில் ஓரளவு விவசாயத்தில் ஈடுபட்டோமாயினும் அறுவடை செய்த நெல்லும் சந்தைப்படுத்த வாய்ப்பு இல்லாமையால் தனியாருக்கு குறைந்த விலைக்கு விற்கவேணடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால், முதலீட்டை மீட்க முடியாது கடனில் தத்தளித்தோம். 2012 இல் செய்த வேளாண்மை ஒருபுறம் நீர்ப்பற்றாக் குறையாலும், வெள்ளப் பெருக்கினாலும், அழிவுக் குட்பட்டதால் இவ்வாண்டிலும் பாரிய நட்டத்தையே சந்தித்தோம். இக்காலத்தில் எரிபொருள் விலை உயர்வு, விதை நெல்தட்டுப்பாடு, பசளை வகைக் கான மானியங்கள் வழங்கப்படாமை போன்ற காரணங்களால் உற்பத்திச் செலவைக்கூட மீட்டெடுக்க முடியாத நிலைக்குள்ளானோம்.


மீள் குடியமர்வின் பின் எமக்கு வழங்கப்பட வேண்டிய வீட்டு வசதி, வாழ்வாதாரவசதி போன்ற நிவாரண வசதிகள் எவையும், எமக்கு வழங்கப்படாத நிலையில் எமது முயற்சிகளுக்கு எதுவித பலனும் பெற முடியாத அவலத்திற்கும் உள்ளாகியுள்ளோம்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச நிவாரணங்களையாவது உடனடியாக வழங்கி உதவுமாறு பணிவுடன் வேண்டி ஓர் அடையாள உண்ணாவிரதத்தை . மேற்கொண்டு இக்கோரிக்கைகளை முன்வைக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

# திட்டமிட்டு ஏமாற்றப்படுவதை சர்வதேச சமுதாயம் அறியாதுள்ளது

எஞ்சியுள்ள விடுதலைப் புலி இயக்கத்தின் நன்கு திட்டமிடப்பட்ட தந்திரோபாயங்களினால் தாம் ஏமாற்றப்படுவதை சர்வதேச சமுதாயம் அறியாதுள்ளது என இராணுவம் நேற்று தெரிவித்துள்ளது. இறுதியாக சனல் - 4 தொலைக்காட்சி நிலையம் வெளியிட்ட படங்கள் விடுதலைப் புலி இயக்கத்தில் எஞ்சியுள்ளவர்களின் குழுக்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெரும் செல்வாக்கு இருப்பதைக் காட்டியுள்ளது என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார். இந்தப் படங்கள் உண்மையானவை எனில் எப்போதே அவற்றை வெளியிட்டிருக்க வேண்டும்.

இவர்கள் இதை சட்ட அமுலாக்கல் நிறுவனங்களிடம் பொருத்தமான சான்றுகளுடன் விசாரணைக்கென வழங்கியிருக்க வேண்டும். ஆனால் முன்னர் எதுவும் செய்யாத அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்விற்கு முன் வெளியிட்டிருப்பதன் நோக்கம் பரபரப்பை ஏற்படுத்துவதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 25

**சம்பந்தனை, நடேசன் 10ஆம் திகதி தொடர்பு கொண்டபோது, நிச்சயமாக தான் இந்திய உயர் மட்டங்களுடன் இந்த விடயம் தொடர்பில் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வருவேன் என்ற உறுதி அளித்திருந்த போதிலும், மறுநாள் 11ஆம் திகதி நடேசன் தொடர்பு கொண்டபோது சம்பந்தன் தொடர்ச்சியாக தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டிருந்தார். இதனை அடுத்து சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் நடேசன் தொடர்பை ஏற்படுத்திய போது, சுரேஸ் பிரேமச்சந்திரன் வன்னியில் இருந்து சற்றலைற் தொடர்பு என்று தெரிந்துகொண்டு இத்தொடர்புகளை தொடர்ச்சியாக துண்டித்துக் கொண்டிருந்தார்.**

■ வே. அர்ச்சுணன்

ஆயுத வழங்கல் முற்றாக முடங்கிய சூழ்நிலையில் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்க முடியாத சூழலில் இருந்த பொழுதிலும், புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனை அழைத்துப் பேசினார். எங்களது நிகழ்ச்சி நிரல்கள் தவறிப் போய்க்கொண்டிருப்பதால் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. உடனடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்பு கொண்டு இந்தியாவின் உதவியை நாடி சிறியளவிலான யுத்த நிறுத்த இடைவெளி ஒன்றிற்கு ஏற்பாடு செய்யுமாறும் அவ்வாறான ஏற்பாடு ஒன்று சாத்தியமானால் நாங்கள் ஆயுத இறக்கமொன்றையும் மேற்கொள்ளுவது பற்றி முடிவு செய்யலாம் என்றும் நடேசனிடம் பிரபாகரன் தெரிவித்தார்.

ஆயுத இறக்குமதி தொடர்பில் பொட்டம்மானும் சூசையும் போட்டி போட்டாலும் இதுவரை குறித்த இரண்டு தளபதிகளில் எவரது முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை. பொட்டம்மானின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி படகு இயந்திரங்களும் சிறியளவிலான ஆயுத உபகரணங்களுமே யுத்த முடிவு காலகட்டத்தின் போது வன்னியை வந்தடைந்து இருந்தது. மறுபுறம் உக்ரேனில் இருந்து ரமேஸ் என்ற புலிகள் இயக்கத்தின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கொள்வனவு செய்துகொண்டிருந்த விமான எதிர்ப்பு பீரங்கிகள் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்பன வன்னிக்கு சூசையின் வழிநடத்தலில் அனுப்பி வைக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஆனாலும் அதற்கிடையில் வன்னியில் யுத்தம் முடிவுக்கு நெருங்கி விட்டதால் குறித்த ரமேஸ் என்ற போராளி உக்ரேனில் கொள்வனவுக்கென கட்டியிருந்த பணத்தையும் கைவிட்டுவிட்டு வேறு நாட்டிற்கு தலைமறைவாகி விட்டார்.

இந்த நிலையில், ஆயுத விநியோக மார்க்கங்கள் முற்றாக முடக்கப்பட்டு யுத்தம் முடிவிற்கு வருவதற்கு முன்னர் பிரபாகரனும் நடேசனும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தொடர்பை ஏற்படுத்தி இந்தியாவின் பங்களிப்புடன் ஒரு சிறிய இடைவெளியை ஏற்படுத்துவதை எதிர்பார்த்தனர். சம்பந்தனை, நடேசன் 10ஆம் திகதி தொடர்பு கொண்டபோது, நிச்சயமாக, தான் இந்திய உயர் மட்டங்களுடன் இந்த விடயம் தொடர்பில் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வருவேன் என்ற உறுதி அளித்திருந்த போதிலும், மறுநாள் 11ஆம் திகதி நடேசன் தொடர்பு கொண்ட போது சம்பந்தன் தொடர்ச்சியாக தொலை பேசித் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டிருந்தார். இதனை அடுத்து சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் நடேசன் தொடர்பை ஏற்படுத்திய போது, சுரேஸ் பிரேமச்சந்திரன் வன்னியில் இருந்து சற்றலைற் தொடர்பு என்று தெரிந்துகொண்டு இத்தொடர்புகளை தொடர்ச்சியாக துண்டித்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் நடேசன் தொடர்பை ஏற்படுத்தியிருந்த போதிலும் அனைவரும் தொடர்பைத் துண்டித்துக் கொண்டே இருந்தனர். இறுதியாக 12ஆம் திகதி நடேசன் தொடர்பு கொண்ட போது சிவாஜிலிங்கமும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மட்டுமே நடேசனுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தனர். இதன்போது நடேசன் சர்வதேச பொறிமுறை ஒன்றின் ஊடாக ஒரு யுத்த நிறுத்தத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், இது தொடர்பில் இந்தியாவுடன் பேசி உங்களால் உதவ முடியுமா? எனக் கேட்டபொழுது நாங்கள் இந்தியாவுடன் பேசுகின்றோம் ஆனால் சம்பந்தன், சுரேஸ் போன்றவர்கள் ஒத்துழைத்தால்தான் அடுத்த கட்டம் தொடர்பில் முன்னேற முடியும். ஏனென்றால் இந்தியா, குறித்த இருவரது கதைகளை மட்டுமே கேட்கும். எனவே சம்பந்தனுடனும், சுரேசுடனும் இவ்விடயம் தொடர்பில் கதைக்கிறோம் என்று அவர்கள் கூறினர். கலதாரி ஹோட்டலில் இருந்த அவர்களிடம் தொடர்பை ஏற்படுத்திய பொழுது, "நான் முன்னம் யுத்தம் வேண்டாம், இந்தியாவின் காலில் விழுவோம், விழுந்து எதையாவது பெறுவோம் என்று கூறிய பொழுது பிரபாகரன் அதை செவிமடுக்கவில்லை. இனி இவர்களுக்கு என்னால் உதவ முடியாது. இவர்கள் அழிவின் விளிம்பிற்கு சென்று விட்டார்கள். இவர்களைக் காப்பாற்றினால் மீண்டும் நாங்கள் ஆபத்தைச் சந்திக்க வேண்டிவரும். எனவே அவர்களின் முடிவு உறுதியாகிவிட்டது. நீங்கள் உங்கள் வேலைகளைப் பாருங்கள். இனி நாங்கள் எங்கள் வேலைகளை பார்க்கவேண்டியதுதான். யுத்தத்தில் வெற்றியை அரசு விரைவில் அறிவிக்கப் போவதாக ஜனாதிபதி சற்றுமுன்னர் என்னுடன் கதைத்த பொழுது தெரிவித்தார். எனவே நடப்பவையெல்லாம் நல்லதுக்கே நடக்கும்" எனக்கூறி தொடர்புகளைத் துண்டித்துவிட்டார்.

இவ்வாறு இறுதிநாட்கள் இறுக்கமாக இருந்தபொழுதிலும், தங்களது முடிவும் உறுதியானது என்று தெரிந்தபொழுதிலும் இறுதிவரைக்கும் தங்களை யாராவது காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில் புலிகள் காத்திருந்த பொழுதிலும் எவருமே உதவுவதற்கு முன்வரவில்லை. மாறாக முடிவு வரும் வரைக்கும் ஊடகங்கள், "விடுதலைப் புலிகள் பெரியளவிலான தாக்குதல் ஒன்றை நடத்தப்போகிறார்கள், தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள், பெரியளவிலான திட்டமொன்றை தலைவர் தீட்டிக்கொண்டிருக்கிறார்" என்ற தோரணையில் செய்திகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தன. இவ்வாறு புலிகளின் குரல் நிறுவனமும் தனது இறுதி முடிவுநாள் வரையும் தங்களது முடிவு நெருங்கிக் கொண்டிருந்த பொழுதிலும் யுத்தத்தில் வெல்வோம் என்ற தோரணையிலேயே செய்திகளை தொடர்ச்சியாக வெளியிட்டுக் கொண்டிருந்தது.

இதனால் இறுதி யுத்தம் வரைக்கும் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் வரை சென்ற மக்கள், புலிகள் யுத்தத்தில் சிலவேளைகளில் திருப்புமுனைகள் எதனையாவது செய்து விடலாம் என்ற நப்பாசை ஒருபுறம் இருக்க மறுபுறம் சர்வதேச நாடு ஒன்று தலையீடு செய்து தங்களை காப்பாற்றி கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். ஆனால் இவர்களது எந்த நம்பிக்கையும் இறுதிவரை நடைபெறவில்லை.

இறுதியுத்தம் அவலங்கள் நிறைந்ததாக முடிவுற்ற போதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் யுத்தம் முடிவடைந்து மக்கள் இடம்பெயந்தோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த பொழுது ஒரு தடவை கூட அந்த மக்களை திரும்பிப் பார்க்கவில்லை. சரி, தாங்கள் அந்த முகாம்களுக்கு வருவதற்கு படையினர் தடை விதிக்கிறார்கள் என்று கூறினால், அந்த மக்களுக்கான அத்தியாவசிய உணவுப்பொருள்களையாவது சேகரித்து, சமைத்த உணவுகளை மேலதிக உணவுப்பொருள்களை வழங்கிக் கொண்டிருந்த எத்தனையோ பொது அமைப்புக்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டாவது அந்த மக்களுக்கு உணவும் அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கவேண்டுமென்று கூட்டமைப்பினர் ஒரு தடவை கூட சிந்திக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து மக்கள் மீண்டும் குடியமர்ந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருந்தபொழுது தேர்தல்கள் வருகின்ற சமயங்களில் மட்டும் மக்களை சந்திக்கின்ற நடவடிக்கைகளில் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். ஏனைய நாட்களை கொழும்பிலும், இந்தியாவிலும் தற்போது வெளி நாடுகளிலும் கழித்து வருகின்றனர். தமிழ்மக்கள் யாராவது, ஏன் மக்களை நீங்கள் சந்திப்பதில்லை என்று கேட்டால், போர்க்குற்றம் தொடர்பாக வெளி நாடுகளுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம்.


வெளிநாடுகளின் உதவியுடன் தீர்வு ஒன்றை பெறப்போகிறோம் என்று கூறி வருகின்றனர். இவர்களது இந்தக் கூற்றுக்களை ஊடகங்களும் பெரியளவில் பெருப்பித்து செய்திகளாக வெளியிட்டு வருகின்றனர். புலிகள் முப்படைகளையும் கொண்ட ஒரு பெரிய இராணுவ அமைப்பாக இருந்து சாதிக்க முடியாததை சுயநலம் படைத்த கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் எப்படிச் சாதிப்பார்கள்? என அண்மையில் இந்தியாவில் உள்ள ஒரு பத்தி எழுத்தாளர் ஆதங்கம் வெளியிட்டிருந்தார்.

சரி இவை ஒருபுறம் இருக்க, புலிகளின் குரல் நிறுவனத்தினுடைய வரலாறுகளைப் பார்த்துவந்த நாம் அதன் நிறுவன நடவடிக்கைகளுக்கு குறிப்பாக அதன் பிரதான செய்தியாளர்கள் அதன் கட்டமைப்புகள் அதன் கடந்தகால நடவடிக்கைகள் என விரிவாக பார்த்த நாம் இன்னும் அதன் பார்க்கப்பட வேண்டிய பக்கங்களை பார்த்தவாறு, புலிகளை ஊடகங்கள் எவ்வாறு அழித்தன. என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்...

(தொடரும்)

# இசை நிகழ்ச்சியில் வெடித்தது பட்டாசு

## 6 பேர் காயம்



(மாத்தளை)

மாத்தளை பகுதியிலுள்ள பிரபல பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது பட்டாசு வெடித்ததில் ஆறு பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த அசம்பாவித சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.20 அளவில் இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மாத்தளை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜெனிவாவில் மகிந்த சமரசிங்க மனித உரிமைக் கூட்டத்தில் உரை




(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐநா மனித உரிமை கவுன்ஸில் 22 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் தெளிவு படுத்தப்படவுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் விசேட பிரதிநிதி, அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனிவா சென்றடைந்துள்ள நிலையில், இன்று புதன்கிழமை விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

மனித உரிமை கவுன்ஸில் 22 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதன்போது கருத்து வெளியிட்ட மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை பாரிய யுத்தக்குற்றங்களை புரிநதுள்ளதாக குற்றம் சமத்தினார்.

அத்துடன், இலங்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என பிரித்தானியா மற்றும் தென்னாபிரிக்கா என்பன வலியுறுத்தின.

இந்த நிலையில் இவை எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கும் வகையில் மகிந்த சமரசிங்க இன்று விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

# மூதூர் கொலைகள் குறித்து சர்வதேசத்திற்கு விளக்கப்படும்

## சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஏ.சீ.எப். என்ற பிரெஞ்சு அரச சார்பற்ற நிறுவனத்தின் 17 ஊழியர்கள் மூதூரில் படுகொலை செய்யப்பட்டமை குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் சர்வதேச சமூகத்திற்கு விளக்கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட உள்ளது. 2006 ஆம் ஆண்டு குறித்த அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் கொலை செய்யப்பட்டனர்.

மேலும், இதே ஆண்டில் திருகோணமலையில் ஐந்து உயர்தர மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்



பான விசாரணைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இதற்கென பிரதி சொலிட்டர் ஜெனரல்கள் மூவர் ஜெனிவாவிற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 21 ஆம் மாநாட்டிலும் இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடததக்கது.

# ஆயுதமுனையில் கார் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வைத்து காரொன்று ஆயுதமுனையில் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை -புனாணை பிரதேசத்தில் வைத்தே இவ்வாறு ஆயுதமுனையில் நேற்று செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி - பூநொச்சி முனையை சேர்ந்த எச்.எம்.கசியுதீன் என்பவரின். காரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளது.


அவர் கண்டி நோக்கி நேற்று காலை காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது குறித்த பிரதேசத்தில் ஆயுதம் தாங்கிய சிலர் காரை வழிமறித்துள்ளனர்.

காரிலிருந்து அவரை இறக்கிவிட்டு ஆயுததாரிகள் காரை கடத்திச் சென்றுள்ளனர். இது தொடர்பில் எச்.எம்.கசியுதீன் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

காரை செலுத்திச் சென்ற கசியுதீன், தனியார் வர்த்தக நிறுவனமொன்றில் விற்பனை மேற்பார்வையாளராக கடமையாற்றுகின்றார். இந்தக் கார் குறித்த தனியார் நிறுவனத்தினாலேயே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்திரவட்டக்கல்லின் மாதிரி வடிவமே ஏலத்தில் விடப்பட்டுள்ளது



(கொழும்பு)

சந்திரவட்டக்கல்லின் மாதிரி வடிவமே இங்கிலாந்தில் ஏலத்தில் விடப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் விஜேரத்ன போஹிங்கமுவவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க குறிப்பிட்டார். இந்த ஆய்வின் அறிக்கை தொல்பொருள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொன்மையான சந்திரவடடக்கல்லின் கீழ் பாகம் உராய்வுத் தன்மையுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் எனவும் குறித்த சந்திரவட்டக்கல்லில் அவ்வாறான தொரு தன்மை காணப்படவில்லையெனவும் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார்.

# சிட்னியில் மாணவி மீது பலாத்காரம் இலங்கை இளைஞர் கைது

(சிட்னி)

பல்கலைக்கழக மாணவி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இலங்கை இளைஞர் ஒருவர் அவுஸ்ரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புகலிடம்கோரி அவுஸ்ரேலியா சென்று மிகோரி பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 20 வயதான மாணவியை பலாத்காரத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே 21 வயதான இலங்கை இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்ட அன்று குறித்த இளைஞர் மிகோரி பல்கலைக்கழக விடுதில் இருக்கவில்லை என குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார்.

மாணவர் விடுதியில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மாணவி, தான் தனது அறையில் நித்திரையில் இருந்தவேளை கடந்த வியாழக்கிழமை அதிகாலை 3.20 மணியளவில் குறித்த நபர் கதவுகளை உடைத்துக் கொணடு உட்பிரவேசித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு இலங்கை நேரப்படி 10.15 மணியளவில் சிட்னி ரயில்வே சதுக்கத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# கையைவெட்டி தப்பிக்க முயன்ற சந்தேக நபர் வைத்தியசாலையில்

(மஹியங்கனை)

மஹியங்கனை நகரில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்ய முற்பட்டபோது, குறித்த நபர் தனது கைகளை வெட்டிக்கொண்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



மோட்டார் சைக்கிளொன்றில் கஞ்சா போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, நேற்றுமுன்தினம் மாலை வீதித்தடை ஏற்படுத்தப்பட்டு, சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை சோதனைக்கு உட்படுத்திய சந்தர்ப்பத்தில் சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். அத்துடன், அருகிலிருந்த கடையொன்றில் இருந்த கத்தியால் தனது கையை அவர் வெட்டிக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 900 கிராம் கஞ்சா போதைப் பொருளும் கைக்குண்டொன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# 'போர் தவிர்ப்பு வலயம்' திரையிடுவதற்கு எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் பேரவையில், சனல்-4 தயாரித்த "போர் தவிர்பபு வலயம்" என்ற ஆவணப்படத்தை திரையிடுவதற்கு இலங்கை தனது கடும் எதிர்ப்புத் தெரித்துள்ளது. இந்த ஆவணப்படத்தை திரையிடுவதற்கு மனிதஉரிமை அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன. இந்நிலையிலேயே இந்த ஆவணப்படத்தை திரையிடக் கூடாது என்று ஜெனிவாவுக்கான இலங்கைக்கான தூதுவர் ரவிநாத ஆரியசிங்க கடிதமொனறை அனுப்பிவைத்துள்ளார். போர் தவிர்ப்பு வலயம் என்ற இந்த ஆவணப்படம் உறுதிபடுத்தப்படாத, ஆதாரமற்ற, நம்பகமற்ற காட்சிகளைக் கொணடுள்ளது என்பதுடன் இந்த ஆவணப்படம் திரையிடப்படுமானால், ஐக்கிய நாடுகள் சபையே அதன் சட்டங்களை மீறிவிடுவதாக அமைந்துவிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வலி நிவாரண மருந்துகளை விற்பவர்கள் மீது விசாரணை

(கொழும்பு)

வலி நிவாரண மருந்து வகைகளை அனுமதியின்றி விற்பனை செய்வது குறித்து தேசிய ஔடதங்கள் அதிகார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெருமளவில் இத்தகைய மருந்து வகைகளை போதையூட்டும் மாததிரைகளாக உட்கொள்வதற்குப் பழகியுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

நீர்கொழும்பு பகுதியிலேயே வலி நிவாரண மாத்திரைகள் அதிகளவில் அனுமதியின்றி விற்கப்படுகின்றமை தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறான மருந்து வகைகளை விற்பனை செய்கின்றவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய ஔடதஙகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

வலி நிவாரண மருந்து வகைகளை விற்பதற்கான அனுமதி, மருந்து விற்பனை நிலையங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.


# அரச வீடுகளில் உள்ளவர்களிடமிருந்து 55 மில்லியன் ரூபா வாடகை வரவில்லை

வாடகை அடிப்படையில் அரசாங்க வீடுகளில் வாழ்ந்து வருகின்றவர்களிடம் இருந்து 55 மில்லியன் ரூபா வாடகைப் பணம் இதுவரை கிடைக்கவில்லை என கணக்காய்வாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. கிடைக்கப்பெற்றுள்ள முதற் கட்ட தகவல்களுக்கு அமைய சில வீட்டு உரிமையாளர்கள் 10 முதல் 15 வருடங்களாக வாடகைக் கட்டணம் செலுத்தாமை தெரியவந்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் சமரவீர சுட்டிக்காட்டினார்.

அரச நிர்வாக அமைச்சின் கீழ் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்க வீடுகளில் உள்ளவர்களிடமிருந்தே இந்த வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் இது குறித்து நாடாளுமன்றத்தில் அறிவிக்கவும் எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதிநிதிகள் மக்களால் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி அறத்திநகர் கிராமத்தில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் பணிகளுக்காக அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.


கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் அகிலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதிதவிசாளருமான முருகேசு சந்திரகுமார், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் தியாகராஜா, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், சுவிஸ் அபிவிருத்தி நிறுவன யாழ் - கிளிநொச்சி பிரதம அதிகாரி ஜெனி, அதன் திட்டமுகாமையாளர் அலெக்ஸ், கிராம சேவையாளர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதில நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து தெரிவிக்கையில்,

மீள்குடியேறிய பளை பிரதேசத்தின் அபிவிருத்தியில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் ஒரு வரப்பிரசாதமாகும். மீள்குடியேற்றத்திற்கு பின்னர் பளையின் அபிவிருத்தியில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியதில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு பிரதானமானது. வீட்டுத்திட்டம், முன்பள்ளிகள், பாடசாலைகள், பொதுக்கிணறுகள், பொதுக் கட்டடங்கள், வாழ்வாதாரம் என இந்நிறுவனம் தனது நிறைவான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் யாழ் - கிளிநொச்சி பிரதம அதிகாரி, போரினால் பாதிக்கப்பட்டுள்ள எங்களுடைய மக்களின் உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இந்நிறுவனத்தின் எல்லாத் திட்டங்களும் மக்களிடம் வெற்றி பெற்றுள்ளன.

அத்துடன் அறத்திநகர் மக்கள் தங்கள் கிராமத்திற்கு சுவிஸ் நிறுவனம் மேற்கொண்ட பணிகளுக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் வகையில் ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்திருப்பது முன்மாதிரியான செயற்பாடு. அதற்காக அறத்திநகர் மக்களை நான் பாராட்டுகிறேன் எனத் தெரிவித்தார்.



**கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான நிவாரணப் பொருட்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் அண்மையில் கையளிக்கப்பட்டன. சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.முருகவேளிடம் பொருட்களை கையளிப்பதனையும், அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண அதிகாரிகள், வலய உத்தியோகத்தர்கள், சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.**

# மஞ்சள் கடவையை சரியாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வீதிகள் பல புனரமைக்கப்பட்ட போதிலும், பாதசாரிகள் மஞ்சள் கடவையை சரியாக பயன்படுத்தாத நிலை காணப்படுவதாக போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஏ - 9 வீதி, ஏ - 35 பரந்தன் - முல்லைத்தீவு ஆகிய வீதிகள் புனரமைக்கப்பட்டு மஞ்சள் கடவைகள் மிகத் தெளிவாக போடப்பட்டும் அவற்றை பாதசாரிகள் பயன்படுத்தாது பொது வீதியூடாக வீதியை கடந்து தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதனாலேயே வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் பாதசாரிகள் மஞ்சள் கடவையை உரியவகையில் பயன் படுத்துவார்களானால் இவ்விபத்துக்கள் இடம்பெறுவது தடுக்கப்படும் எனவும், இது தொடர்பாக பாதசாரிகள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என போக்குவரத்துப் பொலிஸாரும், சாரதிகளும் கேட்டுக்கொள்கின்றனர். (கே)





# எட்டு விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றி

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று சென்னையில் நிறைவடைந்தது.

ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. முதலிரு ஓட்டங்களை சிறப்பாக எதிர்கொண்ட ஹென்றீஸ், நதன் லயன் இணை தொடர்ந்து தடுமாறியது. குறிப்பாக, நதன் லயன் திணறினார். மேலும் 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவுஸ்ரேலிய அணியின் இனிங்ஸ் நிறைவுக்கு வந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹென்றீஸ் 148 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழககாது 81 ஓட்டங்களைப் பெற்றார். பத்தாவது விக்கெட்டுக்காக ஹென்றீஸ், நதன் லயன் இணை 66 ஓட்டங்களைப் பெற்றது. மற்றும் எட்கோவன் 32, கிளார்க் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஸ்வின் ஐந்து, ஜடேஜா மூன்று, ஹர்பஜன்சிங் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. முரளி விஜய், சேவாக் என ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிங்கிய இருவரும் அடுத்தடுத்துஆட்டமிழந்தார். தொடர்ந்து சச்சின், புஜாரா ஆகியோர் நிதானமாக ஆடி வெற்றியிலக்கை எட்டினர். இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சச்சின் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பட்டின்சன், நதன் லயன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணி கப்டன் டோனி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் நான்குபோட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.





# மெத்தனப் போக்கால் தோல்வி

(கராச்சி)

அளவுக்கு அதிகமான நம்பிக்கையே தென்னாபிரிக்க அணியுடனான தொடரை முழுமையாக இழக்கக் காரணம் என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இதில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி, அனைத்து போட்டியிலும் தோல்வி அடைந்து, 0–3 என தொடரை இழந்தது. இதுகுறித்து பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்துல் ரசாக் கருத்துத் தெரிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் கண்ட மோசமான தோல்விக்கு, பாகிஸ்தான் வீரர்களிடம் காணப்பட்ட அளவுக்கு அதிகமான நம்பிக்கையே முக்கிய காரணம். கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.), இலங்கை உள்ளிட்ட நாடுகளில் நடந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்டதால், தென்னாபிரிக்க தொடரிலும் சாதிப்போம் என்ற மெத்தனத்துடன் இருந்தனர். தென்னாபிரிக்க வேகத்தை சமாளிக்க போதுமான பயிற்சி மேற்கொள்ளவில்லை. அணியில் உள்ள சிரேஷ்ட வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை. முதன்முறையாக நான் தென்னாபிரிக்க பயணம் செய்த போது, அணியில் வசிம் அக்ரம், வக்கார் யூனிஸ், இன்சமாம், ரஷித் லதிப், மொயின் கான் உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்கள் இருந்தனர். சிறப்பாக விளையாடிய இவர்கள், இளம் வீரர்களின் சுமையை குறைத்தனர். சிரேஷ்ட வீரரான யூனிஸ்கான் சிறப்பாக செயற்படவில்லை. கடைசி டெஸ்டில், அனுபவ வேகப்பந்துவீச்சாளர் உமர் குல் விளையாடவில்லை. இதனால் இளம் வீரர்களுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டது. தென்னாபிரிக்கா போன்ற பலமான அணிகளுக்கு எதிராக விளையாடும் போது, அணியில் இளம் மற்றும் அனுபவ வீரர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கனவிலும் எதிர்பார்க்கவில்லை

(சென்னை)

டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடிப்பேன் என்பதை எனது கனவிலும் நினைத்தது இல்லை. இதேபோல இந்திய அணிக்காக விளையாடுவேன் என்பதையும் கனவிலும் நினைத்து பார்த்தது இல்லை. ஆகவே நான் அதை எளிமையாகவே கருதுகிறேன் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த டெஸ்டில் பார்ட்னர்ஷிப் மிகவும் முக்கியமாக இருந்தது. முதலில் டெண்டுல்கரும்- புஜாராவும் சிறப்பாக ஆடினர். பின்னர் வீராட் ஹோலி- சச்சின் ஜோடி சிறப்பாக செயற்பட்டது. அஸ்வினின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. அவர் 2ஆவது இன்னிங்சில் மிகவும் நேர்த்தியுடன் பந்து வீசினார். அவருக்கு ஹர்பஜன் ஆதரவாக இருந்தார். ஏராளமான இரசிர்கள் போட்டியை காண வந்து இருக்கிறார்கள். டெஸ்ட் போட்டியைப் பார்க்க அதிகமான இரசிகர்கள் வருவது முக்கியமானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மெய்வல்லுநர் போட்டி

(கல்வயல்)

சாவகச்சேரி - கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், கௌரவ விருந்தினராகவும் சந்திரபுரம் கிராம அலுவலர் க.வாமதேவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (43)

# சாதிக்க சிறந்த வாய்ப்பு



(டாக்கா)

இந்த முறை இலங்கையில் சாதிக்கக்கூடிய மிகச்சிறந்த வாய்ப்பு எமக்கு இருக்கின்றது. முழுமையான திறமைகளை ஒரு மித்த வகையில் வெளிப்படுத்த இது சாத்தியமாகும் என பங்களாதேஷ் அணியின் கப்டன் முஷபிக்கூர் ரஹீம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள், ஒரு ருவென்ரி–20 போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளது. இத்தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரஹீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் முழுமையான திறமைகளை வெளிப்படுத்து விளையாடினால் இலங்கை அணிக்கெதிரான தொடர் எமக்குச் சாதகமாக அமையும். இது மிகச்சிறந்த வாய்ப்பு என்றே நான் கருதுகின்றேன். இத்தொடரில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன பங்குபற்றாதது உறுதிசெய்யப்பட்டுள்ளது. மற்றொரு முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவும் உபாதைக்குள்ளாகி குணமடைந்து வருவதால் அவரும் பங்குபற்ற முடியாது போனால் இலங்கை அணியின் துடுப்பாட்டம் பலவீனமடையும். இலங்கை அணியின் பந்துவீச்சும் மிகச்சிறந்ததல்ல. இது எங்களுக்கான வாய்ப்பு என்றே கருதுகின்றேன். நாங்கள் வெளிநாடுகளில் சிறப்பான பெறுபேறுகளை இதுவரை வெளிப்படுத்தவில்லை. இந்த மோசமான நிலையையும் நிவர்த்தி செய்ய விரும்புகின்றேன். இதற்கு நாங்கள் தொடர்ச்சியாகச் சிறப்பாக விளையாடி முடியாமல் போனதே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.




# பெக்காமின் பெருந்தன்மை

இங்கிலந்து வீரர் டேவிட் பெக்காம் இணைந்துள்ள ப்ரான்சின் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் அணி, பிரான்ஸ் லீக் தொடரில் வெற்றி பெற்றது.

பாரீசில் நேற்று முன்தினம் நடைபெற்ற ப்ரான்ஸ் லீக் –1 கால்பந்து தொடரில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் அணி, மார்செலி அணியை எதிர்த்து விளையாடியது.

இந்த ஆட்டத்தில், 75ஆவது நிமிடத்தில் டேவிட் பெக்காம் மாற்று ஆட்டக்காரராக களமிறக்கப்பட்டார்.

பாரீஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள பெக்காம், அந்த அணிக்காக களம் இறங்கிய முதல் போட்டி இதுவாகும். இந்த போட்டியில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் அணி 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த டிசம்பர் மாதம் லாஸ் ஏஞ்சலீஸ் கேலக்சி அணியில் இருந்து விலகி பாரீஸ் அணியில் இணைந்த டேவிட் பெக்காமுக்கு தற்போது 37 வயதாகிறது. இந்த அணிக்காக அவர் 5 மாதங்கள் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்காக தனக்கு வழங்கப்பட்ட சம்பளத் தொகையை குழந்தைகளின் கல்வி நிதிக்காக டேவிட் பெக்காம் வழங்கியுள்ளார்.

# அக்ரம் இராஜினாமா

(புதுடில்லி)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பயிற்சியாளர் பதவியிலிருந்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஆலோசகர் மற்றும் பந்து வீச்சு பயிற்சியாளராக கடந்த 3 ஆண்டுகளாக இருந்து வந்த பாகிஸ்தான் அணி முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் அந்த பதவியில் இருந்து விலகி இருக்கிறார். தனது மகன்களுடன் அதிக நேரத்தை செலவிட வேண்டியிருப்பதால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.


இந்த தகவலை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதில், அணிக்கு நல்ல ஊக்கம் அளித்து வந்த அக்ரமை இழப்பது வருத்தம் அளிக்கிறது. வருங்காலத்தில் அவர் எங்களுடன் இணைந்து செயல்படுவார் என்பதை நம்புகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தெல்லிப்பளைப் பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தெல்லிப்பளைப் பிரதேச செயலர் ஸ்ரீமோகன், ஈ.பி.டி.பி.யின் சுன்னாகம் பிரதேச அமைப்பாளர் அன்பு, யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் 35இற்கும் மேற்பட்ட கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (93)

# லோகதீஸ்வர், விந்தாரகன் சிறப்பு பந்துவீச்சு
# சென். ஜோன்ஸ் அபார வெற்றி



லோகதீஸ்வர்

(யாழ்ப்பாணம்)

லோகதீஸ்வர்,விந்தாரகன் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்குமிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 22, 23ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுசங்கர் 20, சர்மா 22, கஜிசன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர், கனாமிர்தன் தலா மூன்று, கவாஸ்கர், விந்தாரகன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல்இனிங்ஸிற்காக ஆடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஜஸ்மினன், மதுசன் ஆகியோரின் பந்து வீச்சு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் முதல் இனிங்ஸிற்காக சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கவாஸ்கர் 21, கபில்ராஜ், பிளமிங் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜஸ்மினன் 44 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், மதுசன் 17 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆறு ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சர்மா 32, துவாரகன் 14, ஜஸ்மினன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விந்தாரகன், லோகதீஸ்வர் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 122 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கபில்ராஜ் 38,துவாரகசீலன் 34 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.(எஸ்.பி.)

## வென்றது ஞானமுருகன்

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களின் 40 வயதுக்கு மேற்பட்ட அணிகளுக்கிடையில் லீக் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மோதியது. இப்போட்டியில் ஞானமுருகன் அணி 1 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டிகளில் தொடர்ந்து மாலை நேரங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பூநகரிக் கோட்ட கரப்பந்து
## வெளியான முடிவுகள்

(பூநகரி)

பூநகரிக் கோட்ட மட்ட கரப்பந்துப் போட்டியில் நாச்சிக்குடா முஸ்லிம் த.க. பாடசாலை, வேரவில் மகாவித்தியாலம் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை கைப்பற்றிக் கொண்டன. ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டி வயது அடிப்படையில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை நாச்சிக்குடா முஸ்லிம் த.க. பாடசாலையும், இரண்டாமிடத்தை முக்கொம்பன் அ.த.க. பாடசாலையும், மூன்றாமிடத்தை வலைப்பாடு றோ.க. பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை வேரவில் மகா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை நாச்சிக்குடா முஸ்லிம் த.க. பாடசாலையும், மூன்றாமிடத்தை முழங்காவில் மகாவித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை வேரவில் இந்து மகாவித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை ஜெயபுரம் மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை பூநகரி மகாவித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன. (112)




# நல்லூர் பிரதேச மட்ட கால்பந்து
# மணியம்தோட்டம் ஐக்கியம் சம்பியன்



(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக மட்ட கால்பந்து போட்டியில் மணியம்தோட்டம் ஐக்கியம் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

நல்லூர் பிரதேச வருடாந்த விளையாட்டுவிழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

விலகல் முறையில் நடைபெற்ற இக்கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட பல அணிகள் மோதின. இருப்பினும் இதன் இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கியம் அணியினை எதிர்த்து அரியாலை தென்கிழக்கு மணியந்தோட்டம் ஐக்கியம் அணி மோதியது.

இறுதிவரையும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் அடிக்கவில்லை.தண்ட உதை மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மணியந்தோட்டம் விளையாட்டுக்கழக அணி 4 : 2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# ரக்பி, கால்பந்தில்
## காயப்படுவோருக்கு காப்புறுதி

(கொழும்பு)

ரக்பி கால்பந்தாட்டத்தின் போது, பாதிக்கப்பட்டு ஊனமாகும் விளையாட்டு வீரர்களின் நலன் கருதி காப்புறுதி திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார். ரக்பி கால்பந்தாட்டத்தை மேம்படுத்தும் முகமாக கொழும்பு தேசிய விளையாட்டு வைத்திய நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தலிருக்கும் புதிய நடைமுறைகளைத் தெளிவுபடுத்தும் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் மகிந்தானந்த, இவ்வாறு பாதிக்கப்படும் விளையாட்டு வீரர்களின் வைத்தியச் செலவுக்கு இலவச பணக் கொடுப்பனவு வழங்க அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் கூறினார். ரக்பி கால்பந்தாட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரும்பாலான மைதானங்களில் குறைபாடுகள் காணப்படுவதாக குறிப்பிட்ட அவர் விளையாடும் போது வீரர்கள் உபாதைகளுக்கு உள்ளாவதற்கு இதுவும் ஒரு காரணம் எனவும் கூறினார்.

இதேவேளை, விளையாட்டு வீரர்களின் உளநலத்தை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சு கனவம் செலுத்தியுள்ளது.

விளையாட்டுக் கழகங்கள் அல்லது அணிகளில் உள்ள வீரர்களில் அநேகமானவர்கள் உள ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் இந்த நடவடிக்கையானது வீரர்களுக்கு பயன்தரும் வகையில் அமையும் எனவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி வீரர்களின் உளநல மேம்பாட்டிற்கான செயலமர்வுகளை விளையாட்டுத்துறை அமைச்சு நடாத்தவுள்ளது.

அத்துடன் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனையை நிறுத்துதல், உணவு போஷாக்கு போன்ற விடயங்கள் தொடர்பிலும் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.விளையாட்டு மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தலைமையில் இந்த திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இலங்கையின் பல மாவட்டங்களில் ரக்பி கால்பந்தாட்டத்திற்கென சகல வசதிகளும் கொண்ட மைதானங்கள் அமைப்பதற்கு அப்பகுதி ரக்பி சங்கங்களின் ஊடாக அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் தெரிவித்தார்.கொழும்பு தேசிய விளையாட்டு வைத்திய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அர்ஜுன த சில்வா மற்றும் இலங்கை ரக்பி சம்மேளன பிரதித் தலைவர் லலித்த குணரத்ன உட்பட இன்னும் பலர் இந்நிகழ்வின் போது உரை நிகழ்த்தினர்.

# அரசாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை, ஏன்?

அடுத்த மாதம் அமெரிக்காவின் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயத்தில் கொண்டுவரவிருக்கும்




பிரேரணை - கடந்த வருடம் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையைப் பார்க்கிலும் சற்று காரமானதாக அமையும்போல் தான் தெரிகிறது. இதுவரை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் ஐ.நா.வின் தீர்மானங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் வெளியிட்டு வரும் கருத்துக்களால் இது புலனாகிறது.

தாம் இலங்கை தொடர்பாக இந்த வருடமும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரேரணையொன்றை முன்மொழியவிருப்பதாக அமெரிக்கா இவ்வாரம் மீண்டும் வலியுறுத்தியிருந்தது. அத்தோடு அண்மையில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை - இலங்கை தொடர்பாக வெளியிட்டு இருந்த அறிக்கையை தாம் அங்கீகரிப்பதாகவும் அந்நாடு கூறியிருந்தது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் மேற்படி அறிக்கையை உலகில் முன்னணி மனித உரிமை அமைப்புக்களான மனிதஉரிமைக் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியனவும் அங்கீகரித்துள்ளன. எனவே அவ்வறிக்கை இம்முறை மனித உரிமை பேரவையின் போது இலங்கை விடயத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்றே கூற வேண்டும்.

மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேச விசாரணையொன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் தலைதூக்குவது இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியை கொடுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

புலிகள் அமைப்புடனான போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்தவுடன் வல்லரசு நாடுகளும் ஐ.நா. அமைப்புக்களும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் போர் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்றை நடத்த வேண்டும் என்றுதான் வற்புறுத்தின. ஆனால் கடந்த வருட அமெரிக்க பிரேரணையை ஏற்றதன் மூலம் அவ்வனைத்து அமைப்புக்களும் உள்நாட்டு விசாரணையொன்றை ஏற்க வேண்டியதாயிற்று.

ஆயினும் அவ்வாறு தமக்கு கிடைத்த சாதகமான நிலைமையை பாதுகாத்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது போலும். இப்போது மீண்டும் சர்வதேச விசாரணையென்ற கோரிக்கை தலை தூக்குகிறது.

இதற்குக் காரணம் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை பாதுகாக்கத் தவறியமை என்றே ஐ.நா. அமைப்புக்களும் அமெரிக்காவும் கூறுகின்றன. ஆனால் தாம் அளித்த வாக்குறுதிகளுக்கு மேலதிகமாகவும் பொறுப்போடு செயற்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

உண்மையிலேயே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேச நெருக்குவாரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள இலங்கை அரசாங்கத்திற்கு வழி சமைத்துக் கொடுத்திருந்தது. எனினும் அரசாங்கம் ஆணைக்குழுவின் சிபார்சுகளில் சிலவற்றை மட்டுமே செயற்படுத்த ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவை சம்பந்தமாகவும் அரசாங்கம் போதியளவு சிவில் சமூகத்தோடு ஒத்துழைக்கவில்லையென்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாக கடந்த 13ஆம் திகதி கூறியிருந்தது. அதிலும் சர்வதேச விசாரணைக்கான ஆணையாளரின் கோரிக்கையை தான் மன்னிப்புச் சபையும் வலியுறுத்தியிருந்தது.

இவ்வாறு சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை மீண்டும் வலுப்பெற்று வந்தாலும், அமெரிக்க பிரேரணையின் நோக்கம் அது தான் என்று கூறுவதற்கு இதுவரை ஆதாரங்கள் இல்லை. இவ்வருட பிரேரணை கடந்த வருட பிரேரணையின் மீளாய்வாக அமையும் என்றுதான் சில இடங்களில் கூறப்பட்டு இருந்தது.

எதுவாக இருந்தாலும் இலங்கை அரசாங்கம் கடந்த முறைபோல் இந்த முறை அமெரிக்க பிரேரணையை தோற்கடிக்க அவ்வளவு முயற்சிப்பதாக தெரியவில்லை. இம்முறை ஐ.நா. மனித உரிமை பேரவையின் அமர்வுக்கு அமைச்சர்கள் செல்வதில்லை என்றும் தூதுவர்கள் போன்ற அதிகாரிகளே செல்லவிருப்பதாகவும் சில செய்திகள் கூறுகின்றன. சர்வதேச கண்டனத்தை எப்படியும் தவிர்க்க முடியாது என்று நினைத்து அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்கிறதா அல்லது பெரிதாக எதுவும் நடக்காது என்ற ஏதாவது உத்தரவாதத்தினால் அவ்வாறு நடந்து கொள்கிறதா என்பது தெளிவில்லை.

**- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.**

# எம்.ஜி.ஆர். எழுதுகிறார்

என் வாழ்க்கையில், நான் அடைந்த அனுபவம் ஒன்றை எனக்காகவும், என்னைச் சார்ந்த நண்பர்களுக்காகவும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன், சென்னை நியூ எல்பின்ஸ்டன் தியேட்டர், அண்ணா சாலையில் இருந்தது. அத்தியேட்டரில், "இரு சகோதரர்கள்" என்ற படம் திரையிடப்பட்டது. அதில் கதாநாயகனாக, "இந்திய மேடைப் புலி" என்ற பட்டம் பெற்றிருந்த கே.பி.கேசவன் நடித்திருந்தார். நாடக மேடையிலும், சினிமாவிலும் நடித்து, மிகப் பெரும் புகழ்பெற்றவர் அவர். அவரும், நானும், வேறு சிலரும், அந்த படத்தை காண அன்று சென்றிருந்தோம். இடைவேளையின் போது, அவர் வந்திருப்பதை அறிந்த மக்கள், அவரை பார்ப்பதற்காக எழுந்து, அவர் பெயரைக் கூவி, கூச்சலிடத் தொடங்கினர். அந்த படத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட மிகச் சிறிய வேடங்களில் நடித்திருந்த நான், இதைக் கண்டு திகைத்து, கே.பி.கே. அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இத்தனை ஆதரவு பெற்றவருக்கு அருகில் நாம் உட்கார்ந்திருக்கிறோமே..." என்ற பெருமை கூட எனக்கு உண்டாயிற்று. படம் முடிவதற்குள், வெளியே வந்து விட வேண்டும் என்று, நாங்கள் புறப்பட்டோம். அதற்குள் மக்கள் வெளியே வந்து விட்டனர். நாங்கள் மேலேயிருந்து படியிறங்கி வருவது கூட கஷ்டமாகி விட்டது.

நான் மற்றவர்களை பிடித்துத் தள்ளி, மக்களிடமிருந்து கே.பி.கே. வை விலக்கிச் சென்று, காரில் ஏற்றி அனுப்பினேன். அன்று மக்களுக்கு என்னை யார் என்றே தெரியாது.

இந்த சம்பவம் நடந்து, பல ஆண்டுகளுக்குப் பின், சென்னை அலங்கார் தியேட்டருக்கு கே.பி.கேசவனும், நானும் ஆங்கிலப் படம் ஒன்றைப் பார்க்க போனோம். அப்போது, நான் நடித்த, "மர்மயோகி" படம் வெளிவந்து சில மாதங்களே ஆகியிருந்தன. இடைவேளையின் போது, நான் வந்திருப்பதை அறிந்த மக்கள், எழுந்து கூச்சல் போட்டனர்.

எனக்கு அருகில், அதே கே.பி.கேசவன் அமர்ந்திருந்தார். அவரை யார் என்றே படம் பார்க்க வந்தவர்கள் கவனிக்கவில்லை. படம் முடிந்து வெளியே வந்தோம். மக்கள் கூட்டம் என்னைச் சூழ்ந்தது. என் பெயரையும், "மர்மயோகி" படத்தில் எனக்காக சூட்டப்பட்ட, "கரிகாலன்" என்ற பெயரையும் சொல்லி வாழ்த்தினர். மக்கள் கூட்டத்தின் நெரிசல் அதிகமாகவே, கே.பி.கேசவன், அந்த ரசிகர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றி, டாக்சியில், (அப்போது எனக்கென்று சொந்தக்கார் எதுவும் கிடையாது) ஏற்றி அனுப்பி விட்டார்.



நான் புறப்படும் போது, அந்த மக்கள் கூட்டத்தில் அவரும் ஒருவராக நின்று கொண்டிருந்தார். அவரது நடிப்புத் திறமை, எந்த வகையிலும் குறைந்து விடவில்லை என்பதோடு, நன்கு நடிக்கும் ஆற்றலை அப்போது, அவர் அதிகமாகவே பெற்றிருந்தார் என்பதுதான் உண்மை.

மக்களால் புகழப் பெற்ற, "டைகர் ஒப் இண்டியன் ஸ்டேஜ்" என கவர்னரால் புகழப்பெற்ற, "இரு சகோதரர்கள்" வெளியிடப்பட்ட ஆண்டில், "சிறந்த நடிகர்" என்று தேர்ந்தெடுக்கப்பட்ட, இதே கே.பி. கேசவன் அவர்கள், தங்களோடு இருக்கிறார் என்பதை, பாவம், அந்த மக்களால் அப்போது புரிந்து கொள்ள இயலவில்லை.

என்னால் உச்சநிலையில் இருப்பதாக நம்பப்பட்ட அதே கே.பி.கேசவன், நான் உச்சநிலையில் இருப்பதாக கருதும் வாய்ப்பை, அதே மக்கள் அவருக்கு அனுபவ முத்திரை ஆக்கினர். இதை நேரடியாக நானே அனுபவித்த பின், இந்த போலியான உச்சநிலை என்பதை எப்படி பெற்றுக் கொள்வது... நம்புவது?

கலைஞனுக்கு உச்சநிலை, தாழ்ந்த நிலை என்பதெல்லாம், மக்களால் தரப்படும் மயக்க நிலை, அவ்வளவுதான். இதை நம்பி ஏமாந்து விடுவோமானால், நாம் மற்றவருக்கு பண்பு, பாசம், பகுத்தறிவு முதலியவற்றை தரும் கடமை கலைஞனாக இயங்க முடியாது. கலைஞனைப் பொறுத்தவரையில், அவனுக்கு வீழ்ச்சியே கிடையாது. சூழ்நிலை உயர்த்தும், தாழ்த்தும். அது பிற மக்களின் மனதில் தோன்றும் முடிவு!

ஆனால், கலைஞன் தன் உள்ளத்தை, எந்த நேரத்திலும் பொறாமையின் தாக்குதலுக்கு இரையாக்காமல், மனிதாபிமானத்தோடு கலைத் தொழிலில் செயல்படுவதாக ஏற்றுக் கொள்ளச் செய்தால், அந்த உணர்வுக்கு தோல்வியே கிடையாது. மற்றவர்கள் முன், அவன் தோல்வியடைந்தவனாகக் காட்சியளித்தாலும்,

கலைஞனுடைய நல் உணர்வுள்ள மனதின் முன், அவன் வெற்றி பெற்றவனாவான்.

**(1966இல் 'சமநீதி' இதழில் எம்.ஜி.ஆர். எழுதியது.)**



# ஆமந்திரிகை!

இசைக்கருவிகள் பல சேர்ந்து இசை வழங்குவதை இக்காலத்தில் ஓகெஸ்ட்ரா (ORCHESTRA) என ஆங்கிலத்தில் வழங்குகிறோம். இதை பழந்தமிழர் "ஆமந்திரிகை" என்ற பெயரில் வழங்கினார்கள் என யாழ்நூல் தந்த விபுலானந்த அடிகளார் கூறுகிறார்.

3 - (5)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## ஸ்டீவன் ஸோடர்பெர்க்



இரண்டாவது பாகம், நேர்க்கோட்டில் அமைந்த திரைக்கதையைக் கொண்டுள்ளது. சே சுமார் எட்டாண்டுகள், புரட்சிக்குப் பின்னான கியூபாவைக் கட்டியெழுப்புவதற்காக, தேசப் பொருளாதாரம், பாதுகாப்பு, வெளியுறவுத் துறைகளில் பணியாற்றிவிட்டு, திடீரென்று ஓர்நாள், ஒரு விளக்கக் கடிதத்தை பிடலுக்கு அனுப்பி, தனது எல்லாப் பதவிகளையும் ராஜினாமா




செய்துவிட்டு, கியூபாவிலிருந்தும் வெளியேறிவிட்டார் என்கிற செய்தியோடு ஆரம்பிக்கிறது படம். தனது அடையாளத்தை மாற்றிக்கொண்ட சே கொஞ்சகாலம் ஆர்ஜென்டினாவில் தனது குடும்பத்தோடு (மனைவி, மூன்று குழந்தைகள்) இருந்துவிட்டு, பிறகு போலிப் பத்திரங்களோடு வேறு பெயரில் இரகசியமாக பொலிவியாவுக்குள் நுழைகிறார். பிடல் பெரும் நிதியுதவியை அங்கு அனுப்பி வைக்க, சே தனது ஆதரவாளர்களை வரவழைத்து, காட்டுக்குள் முகாம் அமைத்து, பொலிவிய அரசை இராணுவப் புரட்சியின் மூலம் கைப்பற்றும் பெரும் கனவோடும் நம்பிக்கையோடும் களமிறங்குகிறார்.

உள்நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கம் தன்னோடு இணையுமென்று முதலில் அவர் நம்புகிறார். ஆனால் ரஷ்யாவின் இரகசிய ஆணை காரணமாக அவர்கள் சே-வை நிராகரிக்கிறார்கள் (ரஷ்யா சீனாவுக் கிடையே உறவு முறிந்தபோது, சே மாவோவை ஆதரித்தார்). வெகுசில உள்ளூர்க்காரர்களையே படையில் சேர்க்க முடிகிறது.

"போகப்போக நிலைமை மாறும், சிறு வெற்றிகளைப் பெற ஆரம்பித்தால் படை திரளும்" என்று அவர் நம்புகிறார். ஆனால் பொதுமக்கள் இந்தப் படையினரை அந்நியர்களாகவே பார்க்கிறார்கள். அதனுடன் பொலிவிய அரசு திட்டமிட்டுப் பரப்பும் அவதூறுகளும் வதந்திகளும் சேர்ந்துகொள்ள, பொதுமக்கள் இவர்களை அஞ்சவும் செய்கிறார்கள். அமெரிக்காவின் பெரும் அளவிலான ஆயுத உதவிகளையும் சி.ஐ.ஏ. உளவையும் பயன்படுத்தி பொலிவிய அரசு புரட்சிப் படையை முற்றிலுமாக அழிக்கிறது. சே குவேரா கைதுசெய்யப்பட்டு, பிறகு சுட்டுக் கொல்லப்படுகிறார்.

உணவு வரத்தும் உதவிகளும், ஒருகட்டத்தில் காட்டுக்குள் இருக்கும் படைக்குக் கிடைக்காமல் போகும்போது, அவர்கள் படும் அவலம் கொஞ்சமல்ல. கையில் ஆயுதம் இருந்துகூட கிராமவாசிகளிடம் எதையும் பறிக்காமல், உணவுப்பொருட்களைப் பணம் கொடுத்தே வாங்குகிறார் சே. படையில் வந்துசேரும் பொலிவிய ஆட்கள், புரட்சிக்கான எவ்வித மனத்தயாரிப்பும் இன்றியும், கொள்கையற்றவர்களாகவும் இருப்பதே சே-வை ஒவ்வொரு முறையும் சிக்கலில் ஆழ்த்துகிறது. சிறந்த உதாரணம், துப்பாக்கியைக் கையில் கொடுத்து "சமைப்பதற்கு எதையாவது வேட்டையாடி வாருங்கள்" என்று இரு இளைஞர்களை அனுப்பிய உடனேயே, அவர்கள் ஓடிப்போய்விடுகிறார்கள், இராணுவத்திடம் புரட்சியாளர்களைக் காட்டியும் கொடுக்கிறார்கள்.

கியூபாவில் இருந்திருந்தால், காரும் பங்களாவும், அமைச்சருக்கான மரியாதைகளையும் பெற்றிருக்கக் கூடிய சே, காலில் புண்ணோடு மூச்சிரைத்தபடி காட்டில் அலைந்து திரிவது வேதனையானது. படத்தின் இறுதியில், சே சுடப்பட்ட பின்பு, "ப்ளாஷ் கட்"டில், முதல் பாகத்தின் ஆரம்பத்தில் சே குவேரா-வும் பிடல் காஸ்ட்ரோ-வும் ஒரு சிறிய படையோடு மெக்ஸி



கோவிலிருந்து கியூபாவுக்கு படகில் வரும் காட்சி மீண்டும் காட்டப்படுகிறது. அதில் சே சிறிது விலகி நின்று, கடலைப் பார்த்தபடி இருக்கும் பிடல்-ஐ வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருக்கிறார். அத்துடன் படம் முடிகிறது. இதன் மூலம் சொல்லப்படுவது என்ன என்பது ஓரளவு புரிந்தாலும், தென்அமெரிக்க வரலாற்றையும் சே, காஸ்ட்ரோ பற்றியும் மேலும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றே நினைத்துக்கொண்டேன்.

நான் இரு பாகங்களையும் டிவிடி-யில் அடுத்தடுத்து தொடர்ந்து பார்த்தேன். அப்படிப் பார்ப்பதே சிறந்தது என்று பார்க்காதவர்களுக்குப் பரிந்துரைக்கிறேன். பல இடங்களில் புல்லரிப்பை உணர்ந்தேன், சில இடங்களில் கண்கலங்கினேன். அப்படியொன்றும் உணர்ச்சிகரமோ, மெலோ-ட்ராமாவோ இல்லாத, ஆவணப்படம் போன்ற திரைமொழியில் இது எப்படி சாத்தியமாயிற்று என்று வியக்காமலிருக்க முடியவில்லை. ஒரு சிறந்த நடிகரும், சிறந்த இயக்குநரும், ஒரு நிஜ வரலாற்றைப் படமாக்கினால் எத்தகைய உயிரோட்டத்தைத் திரையில் உருவாக்கமுடியும் என்பதற்கு சிறந்த உதாரணம் இந்தப் படம்.

**(பட்டியல் தொடரும்)**

## முதன்முதலாக...

- செயற்கைக்கோளை முதன்முதலில் ஏவிய நாடு சோவியத் ரஷ்யா. அதன் பெயர் ஸ்புட்னிக். 1957இல் ஏவப்பட்டது.
- கவிதையிலேயே வார இதழை முதன்முதலாக நடத்தியவர் கவிஞர் சுரதா. அந்த இதழின் பெயர் "காவியம்".
- முதன்முதலாகச் நீரிழிவு நோய்க்கான இன்சுலின் 1921இல் வினோர்ட் தொம்சன் என்பவருக்கு ஊசி மூலம் செலுத்தப்பட்டது.
- முதன்முதலில் வெயிலுக்காகத்தான் குடை தயாரிக்கப்பட்டது. பின்பு மழைக்காலத்திற்கும் அது பயன்படுத்தப்பட்டது. குடை என்ற சொல்லுக்கு லத்தீன் மொழியில் "கொஞ்சம் நிழல்" என்று பொருள்.
- முதன் முதலில் மருத்துவமனை அமைக்கப்பட்ட நாடு இத்தாலி.
- ஏப்ரல் முதல் திகதியை முட்டாள்கள் தினமாக முதன் முதலில் கொண்டாடிய நாடு இங்கிலாந்து.
- தமிழ்ப் பத்திரிகைகளில் முதன் முதலில் கார்ட்டூன்களை வெளியிட்டவர் மகாகவி பாரதியார்.



## திராட்சைப் பழம்



திராட்சையில் குளுகோஸ் சத்து இருப்பதால், அது உடலுக்கு உஷ்ணத்தையும் சக்தியையும் கொடுக்கிறது. ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. ஈரலுக்கும் சிறந்த உணவு. செலுலோஸ், சீனி, சேதன அமிலம் ஆகியவை இருப்பதால் அது மலத்தை இளக்கக்கூடிய உணவாகிறது. அது வயிற்றையும் குடலையும் சுருங்கச் செய்து மலச்சிக்கலை நீக்குகிறது. இதில் மேலதிகமாக நீரும் பொட்டாசியம் உப்பும் கலந்திருப்பதால் ஜீரண சக்தியை எளிதாக்குகிறது. இது இதய நோயாளிகளுக்கும் ஈரல் சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கும் சிறந்த உணவாகும். இதில் பொட்டாசியம், சோடியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு, பொஸ்பரஸ் அமிலம் முதலிய கனிப் பொருள்கள் இருப்பதால் அனீமியா, ஓர்த்தரிடீஸ் போன்ற வியாதிகளின் தாக்கத்தைப் பெருமளவில் குறைப்பதற்கு உதவுகிறது.

# இசைபட வாழ்...

- குமரன் கிருஷ்ணன்

**நாம்** எதிர்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வும் காலம் வரையும் ஓவியம் என்று சொல்லலாம் இல்லையா? ஒரு முறை வரைந்த ஓவியத்தை காலம் பெரும்பாலும் மறுபடி வரைவதே இல்லை. மறு முறை வரைந்தாலும் அதன் 'வண்ணம்' முன்னர் வரையப்பட்ட ஓவியத்தின் வண்ணம் போல் இருப்பதே இல்லை. காலம் வரைந்த அத்தகைய ஓவியங்களை நாம் மீண்டும் மீண்டும் துடைத்து வாழ்க்கைச் சுவரில் அடிக்கப்பட்ட வயதின் ஆணியில் மாட்டுவதுதான் நினைவு என்பதோ?

ஒரு பாடல் எப்பொழுது, எப்படி நம் மனதுக்குள் இறங்குகிறது? இந்த உலகை நிர்வகிக்கும் காலத்தின் ரகசியங்களில் இதுவும் ஒன்றோ? ஏதோ ஒரு நிகழ்வில் ஒரு பாடல் முழுதுமோ அல்லது அதன் ஒரு துளியோ நம் காதில் விழுகிறது. அதை நாம் கேட்ட நொடியில், பிறகு பலமுறை கேட்கும் நொடிகள் உரசி உரசி காலத்தின் இழை பாடலுக்குள் நுழைந்து மேலும் மேலும் நினைவுகளை கோர்த்துக் கொண்டே போகிறது இல்லையா? இதில் மனதுக்குள் இறங்கிய நொடி என்று எதை அடையாளப்படுத்துவது?

**ஒரு பாடல் எப்பொழுது, எப்படி நம் மனதுக்குள் இறங்குகிறது? இந்த உலகை நிர்வகிக்கும் காலத்தின் ரகசியங்களில் இதுவும் ஒன்றோ? ஏதோ ஒரு நிகழ்வில் ஒரு பாடல் முழுதுமோ அல்லது அதன் ஒரு துளியோ நம் காதில் விழுகிறது. அதை நாம் கேட்ட நொடியில், பிறகு பல முறை கேட்கும் நொடிகள் உரசி உரசி காலத்தின் இழை பாடலுக்குள் நுழைந்து மேலும் மேலும் நினைவுகளை கோர்த்துக் கொண்டே போகிறது இல்லையா? இதில் மனதுக்குள் இறங்கிய நொடி என்று எதை அடையாளப்படுத்துவது?**

நான் பி.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தபொழுது, பார்வையற்றோர் எழுதும் டீச்சைக்கு எங்கள் கல்லூரி மூலம் சென்றிருந்தேன். அவர்கள் விடை சொல்லச் சொல்ல நாம் எழுத வேண்டும். செந்தில் குமார் என்பவருக்காக பரீட்சை எழுத நான் அவர் அருகில் அமர்ந்தேன். அவர், பிறந்த பொழுதிலிருந்து மனதின் மூலமே உலகைப் பார்த்து வளர்ந்தவர்.

செந்தில் குமார் என்னிடம் பேசிய முதல் வரி, 'நான் சொல்வதை மட்டும்தான் எழுதவேண்டும். எனக்கு உதவுகிறேன் என்று நீங்களாக எதுவும் எழுதுவது எனக்கு பிடிக்காது'. எனக்கு அவரை உடனே பிடிக்கத் துவங்கியது. இவரின் ஒன்பது பரீட்சைகளை இரண்டாண்டுகள் நான் எழுதினேன். பரீட்சை முடிந்து, அந்த வேப்பமரம் நிறைந்த, வேப்பம்பழங்கள் இறைந்த சாலை வழியே நாங்கள் பேருந்து நிறுத்தம்வரை நடந்து வருவோம். சரியான இடங்களில், தேவைக்கு ஏற்றவாறு வளைந்து, மேடுபள்ளங்களில் சரியாக கால் வைக்கும் அவரின் புலன்களின் நுண்ணறிவு என்னை வியக்க வைக்கும். இவர், பெரும்பாலும் ஏதேனும் ஒரு பாடலை 'ஹம்' செய்வார். அதில் பெரும்பான்மை இளையராஜாவுடையதாக இருக்கும்.

அப்படிப்பட்ட தேர்வு முடிந்த வெயில் நிறைந்த மதிய வேளை ஒன்றில்தான் அவர் 'ஊரெல்லாம் உன் பாட்டுதான்' - முணுமுணுத்தபடி மூன்றாக மடித்திருந்த தன் ஊன்றுகோலை பிரித்து நீட்டிக் கொண்டிருந்தார். இந்தப் பாடல் மூன்று பேரால், மூன்று வெவ்வேறு இசைத் தளங்களில், மூன்று முறை பாடப்படும். இந்த மூன்றும் மூன்று வெவ்வேறான உணர்வின் ரேகைகளை மனதில் வரையக்கூடியவை. எனக்கு இரண்டாம் ஸ்டான்ஸாவில் வரும் வயலின் மீது ஒரு அதீத பிடிப்பு. இளையராஜா பாடும் வேர்ஷன் ஒரு ஸ்டான்ஸா மட்டுமே கொண்டது என்றாலும் அதிலும் இந்த வயலின் கோர்வை வரும்.

இசைக் கல்லூரியில் பயிலும் அவரிடம் இந்தப் பாட்டின் இரண்டாம் ஸ்டான்ஸா வயலின் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது அதை உங்கள் புல்லாங்குழலில் வாசியுங்களேன் என்றேன். லேசாக சிரித்தபடி தன் ஜோல்னா பையை தடவிக்கொண்டார். அதனுள் உறங்கிக் கொண்டிருந்த குழலை எழுப்பினாரோ என்னவோ'

சற்று தூரம் நடந்தபின், அடிவேர்கள் பரந்திருந்த ஆலமரத்தின் அடியிலிருந்த சிமெந்துத் திட்டில் அமர்ந்து புல்லாங்குழலை வெளியில் எடுத்தார். காலத்தின் துளைகளில் நினைவை இட்டு நிரப்பக் காத்திருந்தது போல பேசாமல் இருந்தது அந்த புல்லாங்குழல். பெருகி வரும் காட்டருவியின் நீர் பிரிந்து, சிற்றோடை போல இரு கரைகளிலும் இருக்கும் சிறு சிறு பாறைகளின் நடுவே காலமாக வழிந்தோடி வழிந்தோடி, பச்சை பூத்து ஒரு வாசம் வீசுமே..அந்த சூழலையும் அந்த வாசனையையும் நுகரும்பொழுது ஒரு உணர்வு தோன்றுமே, அதைப் போன்றதொரு உணர்வை பீறிட்டு கிளப்பியது அவர் வாசித்த 'ஊரெல்லாம் உன் பாட்டு'.

அந்த இரண்டாம் ஸ்டான்ஸா துவக்கத்தில் வரும வயலின் நடுவே, வயலினை வைத்தே ஒரு ஒற்றை ஸ்ட்ரோக் போட்டிருப்பார் இளையராஜா'அதை அப்படியே புல்லாங்குழலில், ஒரு காலத்துகளுக்குள் நினைவின் ஒரு சொட்டைத் தொட்டு எடுப்பது போல், குழலின் துளையில் விரலை வைத்தெடுத்து வாசித்தார் செந்தில் குமார். பாடலின் ஒரு மிக அற்புதமான நொடிக்குள் நம்மைத் தூக்கியெறியும் அந்த வயலின் நொடிகள், ஒருவேளை அந்த இரணடாம் ஸ்டான்ஸாவில் முழுவதுமே புல்லாங்குழலை வைத்திருக்கலாமோ இளையராஜா என்றேன் நான். இந்தப் பாடலில் வரும் கப்பாஸில் ஒரு மாயம் இருக்கிறது. நதியோ, அருவியோ ஏதோ ஒரு நீரோடத்தில் கால்களை ஆட்டியபடி இந்தப் பாடலை கேட்டுப் பாருங்கள். எத்தனை வேறுபட்ட வேகத்தில் கால்கள் ஆடத்துவங்கினாலும், பாடல் செல்ல செல்ல, தானாகவே அந்த கப்பாஸ் ஒலிக்கும் இடைவெளியின் லயத்திற்கேற்றவாறே நம் கால்கள் நீரில் அலையத்துவங்கும்!



செந்தில் குமார் அன்று 'ஊரெல்லாம் உன் பாட்டு தான்' பாடலை குழலில் வடித்தபின், 'உங்களுக்கு இந்தப் பாட்டில் எந்த வரி பிடிக்கும்?' என்றார். 'ஆலம் விழுதுகள் போலே ஆடும் நினைவுகள் கோடி' என்றேன். சூழலுக்கு பொருத்தமாக நாங்கள் அமர்ந்திருந்த ஆலமரமும், தனது மகிழ்ச்சியை காட்டுவது போல் விழுதுகளை லேசாக அசைத்த படி இருந்தது. அந்த வரியை ஒருமுறை பாடிப் பார்த்த அவர், 'நீங்கள் நினைவுகளை விழுது போல பார்க்கிறீர்கள். நாங்கள் விழுதை நினைவாக பார்க்கிறோம்.' என்றார். நாக்கின் மேல் கல்லை வைத்தது போல நகர்த்த முடியாத வார்த்தைகளுடன் நின்றேன் நான்.

மூன்று விதமாக பாடப்படும், மூன்று முறை வரும் இந்தப் பாடலில் ஒரே ஒரு சொல் மட்டுமே மாறுபடும். நினைவுகள் (நினைவுகளினால்?) வாடுவதற்கும் வாழ்வதற்கும் உண்டான வித்தியாசமே அது.

ஸ்வர்ணலதா பாடுவதில், உள்ளத்தில் ஆடும் உணர்வின் அண்மையும், ஜேசுதாஸ் பாடுவதில், நழுவிக் கொண்டிருக்கும் உணர்வில் நாட்டம் கொள்ளும் தன்மையும், இளையராஜா பாடுவதில் ஒன்றில் ஒட்டியிருந்தும் எட்டி நிற்கும் பன்மையும் வெளிப்படும். அதற்கு அச்சாரம் போடுவது போல, பாடலின் துவக்கத்தில் வரும் கிடார் ஸ்வர்ணலதாவுடனும் ஜேசுதாசுடனும் வெவ்வேறு 'கனம்' தாங்கித் துவங்கும். இளையராஜாவிடம் இந்தத் துவக்கமே இராது.

இந்த உணர்வுகளின் திரியை பிரித்துக் காட்டும் விதமாக, மூன்று பேரின் பாடல்களிலும் இசையின் அமைப்பு ஆங்காங்கே வேறுபடும்.

ஸ்வர்ணலதா மற்றும் ஜேசுதாஸ் பாடும் இரண்டு பாடல்களிலும், சரணங்களின் வரிகளுக்கு அடியிலும் இடையிலும் வயலின் அமைதி காத்து, 'பாதச்சுவடுகள் போகும்' மற்றும் 'ஆலம் விழுதுகள் போலே' ஆகிய வரிகளுக்கு முன் மீண்டும் தலை தூக்கி, இரண்டே வரிகளில் அடங்கி விடும்.

இளையராஜா பாடுவதைக் கேளுங்கள் 'ஒரே சரணம்தான். அந்த சரணத்தின் துவக்கத்தில் வருவதும் மற்ற இருவர் பாடுகையில் வரும் அதே வயலின்தான். ஆனால் இப்போது புல்லாங்குழல் என்னும் 'பாத்திரம்' வயலினிலிருந்து வழியும் உணர்வை, அதே வடிவில் தேக்கி வைத்துக் கொள்ள உடன் வருகிறது!

ஒரு அகலமான சாலையில் நாம் பயணம் செய்யும்பொழுது, ஒரு கீறலாக கிளம்பி, எங்கோ நீண்டு கொண்டு போகும் ஒற்றையடிப் பாதைகள் போல, அந்த பாதை எங்கு போகுமோ என்று நம்மை நினைக்க வைப்பது போல, ஒவ்வொரு வரியின் முடிவிலும் புல்லாங்குழல் நீண்டு புரள்கிறது'

மற்ற இருவர் பாடுகையில் 'ஆலம் விழுதுகள் போலே' வரிகளின் வேரில் பொங்கி வழியும் வயலின், இளையராஜாவின் ஆலம் விழுதில் அமைதியாகி மறைந்துவிடும்! அந்த அமைதியின் ஆழத்தை மேலும் தோண்ட முயல்கிறது தபேலா. அதில் சிதறும் நினைவை கொத்தியெடுத்து நம் மீதே மீண்டும் பூசுகிறது அதனுடன் வரும் கப்பாஸ். அவ்வாறு மறைந்துபோன அதே வயலின், அந்த இரண்டு வரிகள் முடிந்தபின் மீண்டு வந்து காற்றில் நீந்துவது மற்ற இருவரின் அதே வரிகளில் கிடையாது!

செந்தில் குமார் வாசித்த புல்லாங்குழலின் வழியே காலம் வரைந்து போன அந்த மதியம் கடந்து சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து, ஒரு நாள் மாலை நான் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். பஸ் நிறுத்தம் அருகில் அவரைப் போன்ற ஒருவர், ஒரு பெண்மணியுடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நான் பேருந்திலிருந்து இறங்கி, அவர் அருகே சென்று "நீங்கள் செந்தில் குமார்தானே" என்றேன். எனக்கு இருந்த சிறிதளவு சந்தேகம்கூட இல்லாமல் 'என்ன குமரன் எப்படி இருக கீங்க' என்றார் தாமதமின்றி. அவரின் மனைவியை அறிமுகப்படுத்தி, இருவருமே இசைப் பள்ளியில் பணிபுரிவதாக சொன்னார். செந்தில் குமாருக்கு இந்தப் பாடலில் மிகவும் பிடித்த வரி 'விழி காணும் காட்சி யாவும் உந்தன் வண்ண கோலம்தான்'. அவர் மனைவிக்கும் அது பிடித்த வரியாக இருக்கக் கூடும என்பது, அவர்களிடம் விடைபெற்று பேருந்தில் ஏறியபின், அவர்கள் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்தபடி தொலை வில் நடப்பதை பார்க்கையில் தோன்றியது.

'ஆலம் விழுதுகள் போலே ஆடும் நினைவுகள் கோடி'. அந்த விழுதுகளின் அர்த்தத்தைத் தானே நாம் நிகழ்காலத்தில் தேடி, எதிர்காலத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம்?

# உள்ளூர் கிராம வீதிகளில் கழிவுப் பொருட்கள் தேக்கம்

## – மக்கள் அசௌகரியம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் மெத்தனப் போக்கினால் பல கிராம வீதிகளில் பாதசாரிகள் கூட நடந்து செல்ல முடியாத அளவிற்கு பொதுமக்களால் கட்டட கழிவுகள் கொட்டப்பட்டு மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். அச்சுவேலிப் பகுதியில் உள்ள பல உள்ளூர் கிராம ஒருங்கைகளில் பொது மக்கள் தமது கட்டடக் கழிவுகளையும், கற்களையும் ஆங்காங்கே கண்டபடி கொட்டி வருவதால் அவ்வீதிகளின் ஊடாக வாகனங்களைச் செலுத்துவது பெரும் சிரமாக உள்ளதுடன் பொதுமக்கள் நடந்துசெல்வதில் கூட பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அச்சுவேலி தெற்குப் பகுதியில் பயிற்றோலை வீதி மற்றும் முத்துமாரி அம்மன் கோவில் வீதி ஆகியவற்றின் பல இடங்களில் அப்பகுதிகளில் வாழும் பொதுமக்களால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிக்கப்படும் போது அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கட்டடக் கழிவுகள், பூச்சுக் காறைகள், கற்கள் போன்றவை அவர்களின் விருப்பிற்கேற்ப வீதிகளில் குவிக்கப்பட்டும் கொட்டப்பட்டும் வருகின்றது.

இ[illegible] பாதை களினூடாக நடந்து செல்லும் பாத[illegible] துவிச்சக்கரவண்டிப் பயணிகள் ஆ[illegible]நும் பிரயத்தனத்திற்கு மத்தியிலே[illegible]க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்[illegible]ளது. இவ்வாறன சீரற்ற நிலையிலுள்ள இவ்வீதிகளில் வயது முதிர்ந்தவர்கள், பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் எனப் பலரும் தினமும் ஆங்காங்கே விபத்துக்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இது தொடர்பாக பிரதேச சபைக்கு பொது மக்களால் தெரியப்படுத்தியிருந்தும் பிரதேச சபை இதுவரை எவ்வித நடவடிகையும் மேற்கொள்ளப்படவில்லை என இவ்வீதியூடாகச் செல்லும் பயணிகள் தமது கவலையினைத் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் நீளமான பயிற்றோலை - நாவற்காடு வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பிரதேச சபையின் எந்தவொரு திருத்த வேலைகளுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் மிகவும் மோசமான பெரும் குழிகளுடனும் கற்கள் கிளறப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. இதனால் தினமும் இவ்வீதியூடாக செல்லும் பலநூற்றுக் கணக்கான பயணிகள் சொல்ல முடியாதஅளவிற்கு துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் பொது மக்களினால் தெரிவிககப்படுகின்றது.

எனவே இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபை உயர் அதிகாரிகள் உடனடியான இவ்வீதிகளைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(03)

# வைத்தியரின் வழக்கு; விசாரணை இன்று


(வவுனியா)

கொக்காவில் இராணுவ முகாமிற்குள் அத்துமீறி உள்நுழைந்தமை மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு சென்றமை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி அன்று கொக்காவில் இராணுவததினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், தற்போது அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்தியகலாநிதி இரட்ணசிங்கம் சிவசங்கரின் வழக்கு இன்று மீண்டும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அவரின் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார். 25 வருடங்களாக வைத்தியத் துறையில் பணியாற்றிவரும் வைத்தியகலாநிதி இ. சிவசங்கர் யாழ். வைத்தியசாலையில் பணியாற்றி வந்த நிலையில், கைது செய்யப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இரத்தவங்கிப் பொறுப்பதிகாரியாக கடமையேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (160)



நயினாதீவு வீரபத்திரர் ஆலய கலையரங்கில் அண்மையில் நடைபெற்ற, கலை நிகழ்வில் நயினாதீவிலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு புத்தகப்பைகளை வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் கருணாகரகுருமூர்த்தி வழங்கி வைப்பதைக் காணலாம். (175)

# வவுனியா வலய பாடசாலைகளின் அபிவிருத்திகுறித்து ஆராய்வு



(வவுனியா)

வெலிஓயா, வவுனியா தெற்கு பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் கட்டட நிர்மாணப் பணிகளின் தற்போதைய நிலை தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது குறித்த பிரதேச பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்மாணப்பணிகள் தொடர்பாகவும், அவற்றின் தற்போதைய நிலை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாவும் கலந்துரையாடப்பட்டது. வெலிஓயா பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை விரைவில் சீர்செய்து தருவதாக ஆளுநர் உறுதியளித்தார்.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ராஜ்குமார், பொறியியலாளர்கள், கல்வி உயர் அதிகாரிகள், கட்டட ஒப்பந்தகாரர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# ஆயுர்வேதம்



## ஆறாத புண்ணை ஆற்ற...!

தசைநார்க் கசிவு, சிரைகள் எனும் ரத்தக் குழாய்கள் வெட்டுப்படுதல், புண் ஆழமாக இருத்தல், கிருமிகளால் உண்ணப்படுதல், எலும்பு முறிதல், அதிகமான அளவில் நெய் மற்றும் எண்ணெய்ப் பொருட்களைச் சாப்பிடுதல், புண் ஏற்பட்டுள்ள பகுதியில் உரோமம், ஆடை முதலியவை உராய்தல், குலுக்கலுடன் கூடிய பயணம், குடல் பகுதியை மலம் அதிகம் சேரும் அளவில் வளரவிட்டு, சுத்தம் செய்து கொள்ளாமல் மலச்சேர்க்கையை வளர்த்துக் கொள்ளுதல், அதிக அளவில் உணவைச் சாப்பிடுதல், அல்லது அதிகப் பட்டினியிலிருந்து உடலை இளைக்கச் செய்யும் முயற்சி, பகலில் தூங்குதல், இரவு கண் விழித்தல் ஆகியவை காரணமாக, ஆறக்கூடிய புண்ணாக இருந்தாலும், ஆறுவதில்லை என்று ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது.

அதிகமான அசைவுகளைக் கொண்ட உடல் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு அதன் அருகே புண் ஏற்பட்டு இருந்தாலும், அதிக நேரம் கால்களைத் தொங்கவிட்டு வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பவர்களுக்கு மூட்டுப் பகுதிகளில் புண் ஏற்பட்டிருந்தாலும், உடல் எடை அதிகமாக இருப்பவர்களுக்கு உண்டாகியிருக்கும் புண்களும் கூட ஆறாமல், எரிச்சலும் வலியும் தொடர வாய்ப்புண்டு. எப்படியான புண் ஆயினும் அந்தப் புண்ணை விரைவில் ஆற்றுவதற்குரிய வழிவகைகள் ஆயுர்வேதத்தில் பலபடியாகச் சொல்லப்பட்டுள்ளது.

பழைய அரிசியினால் தயாரிக்கப்பட்ட கஞ்சியை காலை உணவாக, உப்புடன் சேர்த்து வெதுவெதுப்பான சூட்டுடன் சாப்பிடுவது நலம். அதுபோல, பச்சைப் பயறு கஞ்சியைக் காலை உணவாகச் சாப்பிட்டால் புண் விரைவில் ஆறுவதற்கு உதவியாக இருக்கும். புது அரிசி, உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, வெல்லம், மாப் பண்டங்கள், பாயசம், தயிர், பால், புளிப்பு, உப்பு, காரம் போன்றவற்றைக் குறைக்கவும். தலையைக் கிழக்கு நோக்கி வைத்து, இரவில் உறங்கினால், விரைவில் ஆறுவதற்கான ஒரு வழியாகும் என்ற ஒரு விநோதக் குறிப்பை ஸஸ்ருதர் எனும் முனிவர் குறிப்பிடுகிறார்.

திரிபலை, கருங்காலிக் கட்டை, அதிமதுரம், வேப்பிலை, மரமஞ்சள், மயில்துத்தம் போன்றவை புண்களை ஆற்றுவதில் சிறந்தவை.

திரிபலை எனும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் மற்றும் கருங்காலிக் கட்டையை வகைக்கு 5 கிராம் வீதம் சேர்த்து, அரை லீற்றர் தண்ணீரில் கொதிக்கவிட்டு, கால் லீற்றராக வற்றியதும் வடிகட்டி, புண் ஏற்பட்டுள்ள பகுதியை காலை, இரவு உணவுக்கு முன் இதன்மூலம் கழுவித் துடைத்து விடுவதால், அங்குள்ள கிருமித் தொற்று நீங்குவதுடன், புண் விரைவில் ஆறுவதற்கும் ஏற்ற சிகிச்சையாகும். அதன்பிறகு, அதிமதுரத் தூளை அந்த இடத்தில் தெளிப்பதும் நல்லதே.

துத்தம், வேப்பிலை, மஞ்சளை நெருப்பிலிட்டுப் புகைவரச் செய்து புண் ஏற்பட்டுள்ள பகுதியில் இரவில் படுக்கும் முன் புகையைக் காண்பித்துவர, புண் விரைவில் ஆறும்.

இரண்டு திரிபலாகுக்குலு எனும் மாத்திரைகளைக் காலை, இரவு உணவுக்கு அரை மணி நேரம் முன்பாகச் சாப்பிட்டு வரவேண்டும்.

சுமார் 28 – 48 நாட்கள் வரை சாப்பிடலாம். மஞ்சிஷ்டாதி கஷாயத்தை 15 மி.லீ. அளவில் எடுத்து, 60 மி.லீ. வெதுவெதுப்பான தண்ணீர் கலந்து, காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிடுவதும் நல்லதே. சுமார் 3 – 4 வாரங்கள் வரை சாப்பிட்டுவர புண் ஆறும்.

**ஆயுளை வளர்க்கும் ஐந்து**

* மாலை வெயில்
* அருவி நீர்
* இளம் மனைவி
* இரவில் பால் அன்னம்
* ஓமப் புகை

(கிருபானந்தவாரியார் கூறியது)


# சர்வதேச நாடுகளுடனான உறவில் நியதிகள் பின்பற்றுவது அவசியம்



(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது. அத்தோடு சர்வதேச நாடுகளுடன் உறவுகளைப் பேணும் போது சில நியதிகள் மற்றும் கோட்பாடுகளை பின்பற்ற வேணடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார். சரியான கொள்கைகளைப் பின்பற்றாது சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. சர்வதேச சமூகத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீளக் கூடிய ஆற்றல் அரசாங்கத்திற்கு கிடையாது. அரசாங்கம் தேர்தல்களை முன் னிலைப் படுத்தி செயற்பட்டு வருகின்றது. அடுத்த தேர்தலை வெற்றி கொண்டு ஆட்சியை நீடிப்பதே அரசாங்கத்தின் இலக்காக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிங்கள - தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு கைகொடுத்தல்



மாத்தறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் செயல் திட்டமொன்று சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் "சமாதி சிசு திவிமக" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுளள்ளது.

இது எல்.எம்.ஜினசேன வியாபாரத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ள ஒரு செயல் திட்டமாகும். மாத்தறை மாவட்டத்தில் சிங்கள மற்றும் தமிழ் மூல பாடசாலை மாணவர்கள் 500 பேர் மாதம்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை வலுப்படுத்துவது இச்செயல் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். சமாதி மன்றத்தின் தலைவர், பணிப்பாளர் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புததிக்க பத்திரண மற்றும் எல்.எம். ஜினசேன வியாபாரத்தின் மனிதவள பொது முகாமையாளர் ரிரோல் அருள்ராஜ் ஆகியோரும் உபகரணங்களைப் பகிர்ந்தளித்தன.

# சிறுநீரக நோய் தொடர்பான ஆலோசனை பின்பற்றப்படவில்லை

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைகளை இலங்கை அரசாங்கம் பின்பற்றத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இலங்கையின் சில பகுதிகளில் காணப்படும் சிறுநீரக நோய் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

எனினும், இந்த ஆலோசனனகளை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது. அனுராதபுரம், பொலனறுவை மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை பின்பற்றத் தவறிய காரணத்தினால், இந்த நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுளளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதனால் இந்தநோய் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பரமர் சங்கமம்



'வீட்டுக்கு வீடு வாசப்படி' என்பர். வீடுவாசலெண்டால் படியும் இருக்கத்தானே செய்யும் வாசலும் படியும் இல்லாமல் என்னெண்டு வீட்டுக்கை நுழையிறது?

முதல்ல வாசலை வைத்துக் கொண்டுதானை எல்லாம் நடக்குது. எண்டால் எங்கையும் வீக்க தூக்கம் இருக்கெண்டுதானே பொருள்.

ஒரு இடத்திலும் மட்ட சுத்தமாகக் காரியங்கள் நடப்பதில்லை. எண்டதைக் குறியீடாக இப்பழமொழி வழக்கத்தில் சுட்டி வருகிறது.

நானிப்ப அலசுவதற்கு எடுத்துக் கொள்ளும் இடம், எங்கட தர்மாஸ்பத்திரி என வழங்கப்படும் யாழ்.போதனாவைத்தியசாலையைத்தான்.

மாதமொருமுறை தவறாமல் 'ஸ்ரொக்' எனப்படும் பக்கவாதப் பரிசோதனைக்கு சென்று வருவேன். செய்தி சேகரிக்க எண்டு போவதில்லை. இப்புடிப் போகேக்க செய்திகள் கிடைச்சால் எழுதுவன்.

ஒருமுறை 'விசிற்' எண்டால் மறுமுறை 'றிபீட' இரண்டின் போதும் மருந்தெடுக்க நீண்ட வரிசையில் நிண்டுதான் காரியம் ஒப்பேறும்.

இந்தக் கிளினிக்குக்கு வருகிறவர்களில் அதிகமானோர் வயது முதிர்ந்த நோயாளிகளாக இருப்பினம். டாக்டரிடம் காட்டுவதானாலும், மருந்தெழுதிப் பெறுவதானாலும் அதுக்கும் வாங்குகளில் அரக்கி அரக்கி இருந்து போக வேணும். அது பறவாயில்லை.

மருந்தெடுக்கப் போனா இல்லையெண்டாலும் ஒரு மணித்தியாலம் கால்கள் கடுக்க நிண்டுதான் எடுக்கலாம். நோயாளிகளின் நிலைமை எப்படி இருக்கும்?

அதுக்கிடேல்ல ஆசுப்பத்திரியில வேலை செய்யிற தாதிமார், சிற்றூழியர் வந்து முன்னுக்குப் போய் உடனேயே எடுத்துக் கொண்டு போவினம்.

இதைப் பாத்து எங்கடை சனமும் சிலது பழகீட்டுதுகள். மருந்துத் துண்டை வாங்கிக்கொண்டு வந்தோடனை நேரே முன்னுக்குப் போய் விடுவினம்.

விரிசையில் நீண்ட நேரமாக நிக்கிற சனம் அதுகளைப் பாத்துச் சத்தம் போடும். சிலதுகள் வெட்கத்துக்கு அஞ்சி பின்னால வந்து நிக்குங்கள். சிலது அசையாதுகள். உந்த ஆசுப்பத்திரி ஊழியர்களும், தாதிமாரும் தங்களுக்கு மருந்தெடுக்கவே வருகினம்?

தமக்கு அறிஞ்ச; தெரிஞ்ச நண்பர்களுக்குத்தானை அடாத்தாத முன்னுக்குப் போய் மருந்தை வாங்கிக் குடுக்கினம். சிலபேருக்கு டாக்டரிடம் காட்டிப் போட்டு வர கனநேரம் நிக்காமல் மருந்தெடுத்துக் கொள்ள ஒருவர் இடம் புடிச்சு வைத்திருப்பார்.

அந்த நாளேல சினிமாத்தியேட்டர்களிலும், ரயில் பெட்டிகளிலும், சீற் புடித்து வைத்திருக்கிறதை நினைவூட்டும். இது ஆசுபத்திரியில வெளிநோயாளர் பிரிவு, இரத்தம், கசம் சோதிக்குமிடம், ஊசிபோடுமிடம் எண்டு சகல இடத்திலும் வியாபித்துள்ளதைக் காணலாம்.

இப்படியான இடங்களை ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய ஊழியர்களே செய்துகாட்டேக்க என்ன நடக்கும்? வீட்டுக்கு வீடு வாசப்படியெண்டுதானே சகல இடங்களிலும் முறை தவறுகள் நடந்து கொண்டிருக்கு. சொல்லுங்க பாப்பம்...

## சாரதிப்பத்திரம் வழங்க கைதடியில் ஏற்பாடு

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நேற்று முன் தினம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக ஆரம்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இப்பகுதியில் உள்ளவர்கள் இலகுவாக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்கொள்வதற்காக நெல்சன் லேணஸ் இந்நடவடிக்கையை மேற்கொண்டது.

## போதைப் பொருள் கொள்வனவு; இராணுவச் சிப்பாய் கைது




(கண்டி)

கடமை நேரத்தில் போதைப் பொருள் கொள்வனவு செய்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். சீருடை அணிந்து கடமையில் ஈடுபட்டிருந்த போது குறித்த இராணுவ கோப்ரல் ஹெரோயின் போதைப் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கண்டிக்கு விஜயம் செய்த போது விசேட பாதுகாப்பு பணிகளுக்காக குறித்த இராணுவச் சிப்பாய் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். கடமை நேரத்தில் குறித்த இராணுவச் சிப்பாய் கண்டி-மஹய்யாவ பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருள் கொள்வனவு செய்துள்ளார். போதைப் பொருளை விற்பனை செய்தவரும், அதனைக் கொள்வனவு செய்த இராணுவச் சிப்பாயும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(27.02.2013 - புதன்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 15 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரம் பின்னிரவு 03.00 வரை. திதி துதியை பின்னிரவு 01.52 வரை. இராகுகாலம் 12.28 - 01.58 வரை. சுபநேரம் 04.58 - 06.28 வரை. அமிர்தசித்தம், கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் இனம்புரியாத அச்சமும் கவலையும். நல்லவர்கள் உதவுவர். தொழில், அதிக வேலை. பணவரவில் இருந்த தாமதம் விலகும். மருத்துவ சிகிச்சை. இஷ்ட தெய்வ வழிபாடு. |
| ரிஷபம் | இயன்ற உதவிகள் செய்து அன்பை பெறுவீர்கள். தொழில், அபரிமிதமான வளர்ச்சி. ஏற்படும். பதவியும் சலுகைகளும் கிடைக்கும். வாழ்க்கைத்தரம் உயரும். நண்பர்களிடம் பாராட்டு. |
| மிதுனம் | உதவி பெற்ற ஒருவர், நன்றி மறந்து பேசுவார். அனுகூல சூழ்நிலை. தொழிலில் புதிய உத்தி. அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி. புத்திரர் விரும்பியது தருவீர்கள். முன்னேற வழி. |
| கடகம் | முக்கியமான செயல் ஒன்றில், கூடுதல் கவனம். குடும்பத்தினர் ஆதரவு. தொழில், முன்னேற்றம். அளவான பணவரவு. பயணத் திட்டத்தில் மாறுதல். உணவில் கவனம். |
| சிம்மம் | பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். பொறாமை விமர்சனங்களை பொருட்படுத்தமாட்டீர்கள். தொழில் தாராள வளர்ச்சி. ஆதாய வரவு. குடும்ப ஒற்றுமை. மகிழ்ச்சி. புதுமையில் ஆர்வம். |
| கன்னி | சிரம சூழ்நிலையின் தாக்கம். நேர்மை குணத்தால், ஓரளவு நன்மை. தொழில், மந்தம். உறவினர் வகையில், செலவு. வீண் பொறுப்புகள் ஏற்க வேண்டாம். உடல் நலத்திற்கு ஓய்வு. |
| துலாம் | திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். முயற்சிகளுக்கு நற்பலன். தொழில், அனுகூலம். சராசரி பணவரவு. அன்புக்குரியவரிடமிருந்து பரிசுப் பொருள். வாழ்வின் வளர்ச்சிக்கு ஊக்கம். |
| விருச்சிகம் | கஷ்ட சூழ்நிலையை, பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழிலில், அதிக கவனம். அளவான பணவரவு. எதிர்பார்த்திருந்த சுபசெய்தி வரும். குடும்ப அன்யோன்யம். பிணி குறையும். |
| தனுசு | தகுதிக்கு மீறிய வாக்குறுதி தராதீர்கள். தொழில், மாறுபட்ட சூழ்நிலை வரும். சேமிப்பு செலவுக்கு பயன்படும். இல்லறத் துணை ஆறுதல். மனதுக்கு நம்பிக்கை. விருந்துபசரிப்பு. |
| மகரம் | செயல்களில் மேம்போக்கு. பிறருக்கு இரங்கி கஷ்டப்படத் துணிவீர்கள். தொழில் சராசரி. செலவு கூடும். பகட்டுக்காக பயன்தரா பொருள் வாங்காதீர். விட்டுக் கொடுத்து வெல்வீர்கள். |
| கும்பம் | வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய வழி. தொழிலில், புதிய சாதனை. கூடுதல் வரவில், குடும்பத்தேவை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர், நல்ல ஆலோசனை பெறுவர். ஜெயம். |
| மீனம் | புதுமை எண்ணம். அளவுடன் பேசி, நன்மை பெறுவீர்கள். தொழில், இடையூறு விலகும். பணவரவு திருப்தி. தான, தர்மம். சமூகத்தில் புகழ். பெரியவர்கள் ஆலோசனை. யோகமான நாள். |

## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | |
|---|---|
| ரொட்டி, ரொட்டி, ரொட்டியாம் | சொட்டு தம்மா எச்சிலும் |
| வெட்டி, வெட்டி, வெண்ணெயில் | துட்டுக் கெங்கே போவது? |
| தொட்டுத் தொட்டு வாயிலே | கிட்ட உள்ள கடையிலே |
| பிட்டுப் பிட்டு போடலாம் | ரொட்டி கூட விக்குது |
| ரொட்டி என்று சொன்னதும் | துட்டில்லாமல் கிடைக்குமோ? |
| மட்டில்லாத ஆசை தான் | தட்டி டாமல் தந்திடு |
| | அழ. வள்ளியப்பா |

1) "ரொட்டி" எங்கே விற்கப்படுகிறது? ..........

2) "வேட்டி" என்பதன் குறுகிய ஓசைச் சொல்லை எழுதுக. ..........

3) "விருப்பம்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

4) "துட்டு" என்பதன் ஒத்த ஓசைச் சொல்லை எழுதுக. ..........

5) இப் பாடலைப் பாடியவர் யார்? ..........

**02) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.**

1) முத்திரை : ..........

2) உண்மை : ..........

3) ஒலி : ..........

4) விழா : ..........

5) அலை : ..........

**03) பொருத்தமான எழுத்தை வைத்து இடைவெளி நிரப்புக.**

1) உ .......... க்கம்

2) த .......... யணை

3) ஒ .......... க்கம்

4) கலைவி ..........

(மா , லை, ற, யூ )



## சிங்களம்

**01) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) ஆயுபோவன் ..........

2) ஸ்(த்)துதிய் ..........

3) பொ(த்)த ..........

4) றோஹல ..........

5) பூஸா ..........

6) அரலிய ..........

7) ரொ(ட்)டி ..........

8) வாடிவென்ன ..........

9) கினா வென்ன ..........

10) கருணாகர ..........

**02) பின்வரும் சிங்களத் தொடரின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) ரவுமக் அதின்ன : ..........

2) பொ(த்)த கியவன்ன : ..........

3) ஹெமோம வாடிவென்ன : ..........

4) கடய(ட்)ட யன்ன : ..........

5) கிரி(B)பத் கன்ன : ..........

**03) பொருத்தமான தமிழ்ச் சொல்லை சிங்களத்தில் எழுதுக.**

1) தலை : ..........

2) கை : ..........

3) கால் : ..........

4) அணில் : ..........

5) செல்வரத்தை : ..........

6) தாமரை : ..........

7) பாண் : ..........

8) இடியப்பம் : ..........

**04) பின்வருவனவற்றை தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 1) 11 | 1) (dh) தொலஹ |
| 2) 12 | 2) (dh)தஹ(த்)துன |
| 3) 13 | 3) பஹலொஹ |
| 4) 14 | 4) எ(க்)கொலஹ |
| 5) 15 | 5) தஹஹ(த்)தர |

**04) குறில் சொல்லுக்கேற்ப நெடில் சொல் எழுதுக**

1) பதி : ................................

2) மலை : ................................

3) கடம் : ................................

4) பனம் : ................................

5) குடை : ................................

**05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்குக.**

1) தரும் / சுகம் / சுத்தம் : ................................................................

2) இல்லை / என்னிடம் / பணம் : ................................................................

3) இருக்கவேண்டும் / நாம் / நலமாக: ................................................................

4) புரிந்துவிட்டது / தந்திரம் / நரியின் : ................................................................

5) பிடித்தேன் / நான் / மீன் : ................................................................

**06) விடை எழுதுக.**

1) சுத்தம் எமக்கு எவற்றைத் தருகின்றது?

................................................................................................

2) விரும்பத்தகாத பண்புகள் இரண்டு எழுதுக.

1) ............................................ 2)..................................................

3) சிறந்த பண்பாகக் கருதப்படுவது எது?

................................................................................................

4) சுத்தத்தை வலியுறுத்தும் பழமொழி ஒன்று எழுதுக.

................................................................................................

5) உமக்கு விருப்பமான பண்பு ஒன்று எழுதுக.

................................................................................................

**07) சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) மண்ணரிப்பு : ........................ + ........................

2) கற்பாறை : ........................ + ........................



**08) கூட்டுக**

1) 3 + 4 + 3 = ...........................

2) 3 + 3 + 3 = ...........................

3) 2 + 1 + 5 = ...........................

4) 1 + 8 + 2 = ...........................

5) 4 + 6 + 7 = ...........................

**09) அட்டவணையை நிரப்புக**

| | | | |
|---|---|---|---|
| 1) | 12 ஐயும் 9 ஐயும் கூட்டும்போது வருவது | 12 + 9 | 21 |
| 2) | 34 உடன் 8 ஐக் கூட்டும்போது வருவது | | |
| 3) | 15 உடன் 10 ஐக் கூட்டும்போது வருவது | | |
| 4) | 63 உடன் 5 ஐக் கூட்டும்போது வருவ்து | | |
| 5) | 28 உடன் 2 ஐக் கூட்டும்போது வருவது | | |

**10) கூட்டுக**

| | | | | |
|---|---|---|---|---|
| ப ஒ | ப ஒ | ப ஒ | ப ஒ | ப ஒ |
| 3 3 | 1 4 | 1 3 | 7 4 | 6 1 |
| + 6 5 | + 4 3 | + 3 6 | + 2 5 | + 2 7 |

**11) சிறிய எண்ணிலிருந்து பெரிய எண் வரை எழுதுக**

1) 12, 36, 18 : ................................................................


2) 48 , 25, 36 : ................................................................

**12) பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்வரை எழுதுக.**

1) 18, 65, 42 : ................................................................

2) 78 , 19, 90 : ................................................................

**13) பின்வரும் கடிகாரத்தில் சரியான மணியைக் குறித்துக் காட்டுக.**



(1) 3.30 (2) 9.15 (3) 12.30 (4) 6.45

# இராஜஸ்தானில் போர் பயிற்சி பாகிஸ்தான் உளவாளி கைது




இராஜஸ்தானில் இந்திய இராணுவத்தினர் நடத்திய போர் பயிற்சியை வேவு பார்த்த பாகிஸ்தான் உளவாளி கைது செய்யப்பட்டார். இராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் பாலைவனப் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினர் போர்ப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். அண்மையில் விமானப் படையினர் இரும்புக்கரம் என்ற பெயரில் போர்ப் பயிற்சி செய்தனர். இந்த நிலையில், பொக்ரானில் இருந்து பாகிஸ்தானுக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் செய்யப்பட்டுள்ளதை உளவுத் துறையும், இராணுவ உளவுப் பிரிவும் கண்டுபிடித்தன.

இதையடுத்து அடிக்கடி பாகிஸ்தானுக்கு தொலைபேசியில் பேசிய சுமீர் கான் (வயது - 34) என்பவரை ஞாயிறன்று பிடித்து விசாரித்தனர். அப்போது பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐக்கு உளவாளியாக அவர் செயல்பட்டது தெரியவந்தது. பாகிஸ்தானில் அவரது உறவினர் ஒருவர் ஐ.எஸ்.ஐ உளவாளியாக இருக்கிறார். அவர் மூலம் இந்திய இராணுவ இரகசியங்களை ஐ.எஸ்.ஐக்கு கடந்த 2 ஆண்டுகளாக அனுப்பி உள்ளார்.

பொக்ரானில் இந்திய இராணுவ பயிற்சிகள் மற்றும் மேற்கு பிராந்தியத்தில் உள்ள இராணுவ நிலையங்கள் குறித்த வரைபடங்கள் உள்ளிட்ட விவரங்களை அவர் அனுப்பியது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தவிர அவர் அடிக்கடி பாகிஸ்தான் சென்றுள்ளார். 10ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள அவர் கம்ப்யூட்டரில் நிபுணராக இருந்துள்ளார். பாகிஸ்தானில் உள்ள தனது உறவினரிடம் போனில் இரகசிய குறியீடு பயன்படுத்தி பேசியுள்ளார். அவரது வீட்டில் இருந்து கம்ப்யூட்டரை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அவரை பொலிஸார் கைது செய்து ஜெய்ப்பூர் கொண்டு சென்றனர். அங்கு அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஹைபர்சோனிக் பிரமோஸ் 4 ஆண்டுகளில் தயார்




ஒலியை விட 7 மடங்கு கூடுதல் வேகத்தில் செல்லக்கூடிய ஹைபர்சோனிக் பிரமோஸ் ஏவுகணை, இன்னும் 4 ஆண்டுகளில் தயாரிக்கப்படும் என விஞ்ஞானி சிவதாணுப்பிள்ளை கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யாவுடன் இணைந்து இந்த ஏவுகணைகளை உருவாக்கி வருவதாக தெரிவித்தார். மேலும் இந்தியா தயாரிக்கும் பிரமோஸ் ஏவுகணைகளை வாங்க உலக நாடுகள் முன்வந்துள்ளதாகவும் விஞ்ஞானி சிவதாணுப்பிள்ளை பெருமிதத்துடன் தெரிவித்தார்.

இருப்பினும் இந்திய இராணுவத்தின் ஆயுதத் தேவை அதிகரித்து வருவதால், முப்படைகளின் மேம்பாட்டிற்கே முக்கியத்துவம் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

## வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு



ஐதராபாத்தில் தொடர் குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அச்சம் நீங்குவதற்குள் தலைநகர் டில்லியில் 2 இடங்களில் வெடிகுண்டுகள் அடங்கிய பை கண்டுபிடிக்கப்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவர் டில்லி இராணுவ மருத்துவமனை அருகே ஒரு பையினை வீசி சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வெடிகுண்டு நிபுணர்கள் அப்பகுதிக்கு வர வழைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. அதில் பையில் வெடிகுண்டு இருந்தது உறுதி செய்யப்பட்டு, வெடிகுண்டு செயல் இழக்கச் செய்யப்பட்டது. இதே போல் கிரேட்டர் கைலாஷ் மார்க்கெட் பகுதியிலும் கேட்பாரற்று கிடந்த பை ஒன்றினை ஆய்வு செய்த வெடிகுண்டு நிபுணர்கள், வெடிகுண்டை கண்டறிந்து அதை செயலிழக்கச் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, அப்பகுதிகளிலும் இருந்தவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில் டில்லியில் அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை, வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2010

பொது மற்றும் சிறப்பு கலைமாணித்தேர்வு பகுதி - ii - 2009 & 2010

சிறப்பு கலைமாணித்தேர்வு பகுதி - iii - 2009

[வெளிவாரி]

மேற்படி பரீட்சைகளை 15.03.2013 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 30.03.2013 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 12.03.2013 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
26.02.2013. (C/2448)

## கிறிஸ்தவ நற்சிந்தனை

### துன்ப கிண்ணத்தில் பருக ஆயத்தமா?

இயேசு தன் சாவைப் பற்றி முன்னறிவித்த சூழலில்தான் செபதேயுவின் மனைவி தன் பிள்ளைகளுக்காக வேண்டுகோள் விடுக்கின்றார்.

"நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்களை இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்" (மத்தேயு 20:21) என்று வேண்டுவது பொருத்தமானது.

இயேசுவின் வழி துன்பத்தின் வழி, சிலுவை வழி, கசப்பு நிறைந்த வழி, துன்பக் கிண்ணத்தில் பருகும் வழி, இரத்த திருமுழுக்குப் பெறும் வழி, இவற்றை எல்லாம் தெரிந்தவர்தான் செபதேயுவின் மனைவி. இதனால்தான் அவர் இயேசுவின் சிலுவைப் பயணத்தில் பங்கெடுத்தவர். கொல்கொதாவின் துயர அனுபவங்களை உணர்வுபூர்வமாகக் கண்டு கொண்டவர். (மத்தேயு 27: 55 - 56).

சிலுவை சுமத்தல் இலகுவான அனுபவம் அல்ல, மாறாக மிகவும் கடினமான அனுபவம். அந்த அனுபவத்தில் தன் பிள்ளைகள் கடந்து செல்ல வேண்டும் என்று விரும்பினார் செபதேயுவின் மனைவி.

துன்பக் கிண்ணத்தில் பருக கிறிஸ்தவர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். திருத்தூதர்களில் முதன்முதலாக மறைசாட்சியாக இருந்தவர் யாக்கோபு (தி.ப. 12 : 2) அவருடைய துன்பக் கிண்ணம் மறைசாட்சியே! யோவானின் இறுதி நாட்கள் வேறாக இருந்தது. பாரம்பரியத்தின்படி யோவான் எபேசுவில் நூறு ஆண்டுகள் மட்டில் வாழ்ந்தவர். அவருடைய மரணம் இயற்கை மரணம். ஆனால் அவருடைய துன்பக்கிண்ணம் நாளாந்த வாழ்வில் அவர் எதிர்கொண்ட சவால்கள் ஆகும்.

எனவே இயேசுவோடு இணைந்து துன்பக் கிண்ணத்தில் பருக நாம் ஆயத்தமா?

-வி.பி.தனேந்திரா.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 30.06.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் - 16.03.2013, 17.03.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | ------- |
| நெல்லியடி | -------- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/2447)

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: சுஹதா ஆதீம்
355, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அகவை 04இல்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................
முகவரி : ........................................
பிறந்த ஆண்டு : ........................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
........................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# திருச்சபை குறித்து வதந்திகள் பத்திரிகைகள் வெளியிடுகின்றன

## – வத்திக்கான் புகார்



போப் பெனடிக்ட் பதவி விலக முடிவு செய்த பின்னர் கத்தோலிக்க திருச்சபை. குறித்து பத்திரிகைகள் வதந்திகளை பரப்பி வருகின்றன என வத்திக்கான் புகார் கூறியுள்ளது.

உலகில் கத்தோலிக்கத் திருச்சபைகளின் தலைவராக போப் இருந்து வருகிறார்.

தற்போது 16ஆவது போப்பாக இருக்கும் பெனடிக்ட் நாளை பதவி விலகுகிறார்.

போப்பின் இந்த முடிவு குறித்து, இத்தாலிய பத்திரிகைகள் பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இதுகுறித்து வத்திக்கான் அதிகாரி பெடரிக்கோ லொபர்டியோ கூறியதாவது: போப் பதவி விலகுவது 600 ஆண்டுகளாக நடக்காத ஒன்று. அவரது முடிவு குறித்து பத்திரிகைகள் அவதூறாக செய்திகள் வெளியிட்டு வருகின்றன. இந்த வதந்திகள், திருச்சபைக்கு அதிக வருத்தத்தை அளித்துள்ளது.

வத்திக்கான் சில பாதிரியார்களது நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்ததால் தான் போப் பதவி விலக தீர்மானித்ததாக இத்தாலி நாட்டின் லாரிப் பப்ளிக் பத்திரிகை செய்தி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் சபையில், ஊழல்கள் பெருகி விட்டதாக சில பத்திரிகைகள் கூறியுள்ளன.

# மேலாடையின்றி பெண்கள்; இத்தாலியில் பரபரப்பு




இத்தாலியில் நேற்று முன்தினம் நடந்த நாடாளுமன்றத். தேர்தலில், ஏற்கனவே 3 முறை பிரதமராக இருந்து செக்ஸ் மற்றும் ஊழல் வழக்கில் சிக்கி பதவி இழந்த சில்வியோ பெர்லஸ் கோனி போட்டியிடுகிறார்.

இவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சியைச். சேர்ந்த பியர் லுகி பெர்சானி போட்டியிடுகின்றார். தற்போது இத்தாலியின் பொருளாதார நிலை மிகவும் வீழ்ச்சி அடைந்த நிலையில் உள்ளது. இந்தத் தேர்தல் மூலம் அமையும் புதிய அரசால்தான் நாட்டின் பொருளாதார நிலையை சீரமைக்க முடியும் என்ற நிலை உள்ளது.

எனவே, இந்தத்தேர்தலில் வாக்களித்த மக்கள் நீண்ட வரிசையில் நின்று ஆர்வத்துடன் வாக்களித்தனர். இந்த நிலையில் மிலன் நகரில் ஒரு பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் வாக்களிக்க மக்கள் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்த போது அங்கு வாக்களிக்க முன்னாள் பிரதமர் பெர்லஸ் கோனியும் வந்திருந்தார். அப்போது, மேலாடை அணியாத 3 பெண்கள் திடீரென அவர் முன்பு ஓடி வந்து நின்றனர்.

சில்வியோ பெர்லஸ் கோனியே இந்த நாட்டின் பிரதமர் வாழ்த்தி கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது. உடனே அங்கு பாதுகாப்புக்கு நின்று கொண்டிருந்த பொலிஸார் விரைந்து வந்து அந்த 3 பெண்களையும் கைது செய்து இழுத்துச் சென்றனர். விசாரணையில், அவர்கள் உக்ரைன் நாட்டை சேர்ந்த ஒரு பெண்கள் அமைப்பினர் என தெரிய வந்தது.

# எகிப்தில் பலூன் விபத்து 19 பயணிகள் பலி



எகிப்தின் தெற்கு பகுதியில் உள்ள லக்ஸர் நகரத்தின் அருகே வெப்பக் காற்று பலுனில் பயணித்த 19 சுற்றுலாப் பயணிகள் பலியாகினர்.

இவர்களில் சிலர் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பயணிகள் ஆவர். நைல் நதிக்கரையின் ஓரத்தில் அமைந்துள்ள லக்ஸர் நகரமானது சிதைந்து போன புராதன எகிப்து அரசர்கள் வாழ்ந்த இடமாகும். இது மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

இங்கிருந்து சுமார் 1000 அடி உயரத்தில் இந்த பலூன் பறந்த போது வெடித்துள்ளது. இதில் பயணித்த 20 பேரில் 19 பேர் மரணமடைந்தனர். ஒரு பயணியும், பலுனை இயக்கிய நபரும் தப்பித்தனர்.

மரணமடைந்தவர்களில் இதுவரை 8 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உலகச் செய்திகள்

# பழங்குடியினரிடையே மோதல் சூடானில் 51 பேர் பலி



ஆபிரிக்க நாடான சூடானின் மேற்கு தர்பார் பகுதி தங்கச்சுரங்கம் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வது தொடர்பாக பானி ஹுசைன் மற்றும் ரிசைகாட் பழங்குடியினர்களிடையே பிரச்சினை இருந்து வருகிறது.

இங்குள்ள ஆயுதம் ஏந்திய இந்தப் பழங்குடியினரிடையே கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து கடும் சண்டை நடந்து வருகிறது. இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். 1,00,000 பேர் அகதிகளாகியுள்ளனர். மாதங்களாக தீவிரமடைந்த இந்தச் சண்டையை முடிக்க ஒப்பந்தமும் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் வாகனங்கள், ஒட்டகங்களில் ஆயுதங்களுடன் சென்ற ஒரு கும்பல் எல்சிரீப் என்னுமிடத்தில் மற்ற பழங்குடியினர் மீது தாக்குதல் நடத்தியது.

இதில் குறைந்தது 51 பேர் கொல்லப்பட்டனர். 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். சர்வதேச நீதிமன்றம் அதிபர் ஓமர் ஹசன் அல்பசீர் மீது பிடிவாரண்டு பிறப்பித்துள்ளது. அதற்கு அவர் கீழ்ப்படிய மறுத்து வருகிறார். தர்பார் பகுதியில் பத்திரிக்கையாளர், தூதுவர்கள், உதவியாளர்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை.

# பதவிக்காலம் நீடிப்பு மனம் மாறிய ரவுல்



பதவி விலகப்போவதாக அறிவித்திருந்த ரவுல் காஸ்ட்ரோ, தன் பதவிக்காலத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

கியூபா நாட்டின் ஜனாதிபதியாக இருந்த பிடல் காஸ்ட்ரோ, கடந்த 2008ஆம் ஆண்டில் உடல் நலக்குறைவால் பதவி விலகியதற்கு பின்னர் இளைய சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ பதவி யேற்றுக்கொண்டார்.

தற்போது கியூபாவிற்கு ஜனாதிபதியாக உள்ள ரவுல் காஸ்ட்ரோ, வயோதிபத்தின் காரணமாக பதவி விலகப்போவதாக அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. அமெரிக்காவுக்கெதிரான நிலைப்பாடு கொண்ட நாடுகளில் ஒன்றான கியூபாவிற்கு பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

காஸ்ட்ரோ சகோதரர்களின் ஆட்சி முடிவுறாத வரை, பொருளாதார தடைகளை நீக்க அமெரிக்க அரசு முன்வராது என அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் ரவுல் காஸ்ட்ரோ கலந்து கொண்டு மேலும் 5 ஆண்டுகளுக்கு பதவியில் நீடிக்கப் போவதாக அறிவித்தார்.

# பிளாஸ்டிக் கழிவில் எரிபொருள் விமானத்தில் பறக்கத்திட்டம்



இலண்டனில் பிறந்து அவுஸ்ரேலியாவில் வாழும் விமானி ஒருவர் பிளாஸ்டிக் கழிவினால் தயாரிக்கப்படும் எரிபொருளைக் கொண்டு நீண்ட தூர விமானப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகிறார்.

விமானி ரோசெல்(Rowsell) தனது விமானத்தில் ஐந்து தொன் பிளாஸ்டிக் கழிவுகளை ஏற்றி அதிலிருந்து கிடைக்கும் ஆயிரம் க லன் எரிபொருளை கொண்டு ஆறு நாட்கள் விமானத்தை ஓட்ட திட்டமிட்டுள்ளார்.


# ஆளில்லாத குண்டு வீச்சு விமானம் கைப்பற்றியதாக ஈரான் அறிவிப்பு



வெளிநாட்டைச் சேர்ந்த ஆளில்லாத குண்டு வீச்சு விமானத்தை பிடித்துத் தரை இறக்கி விட்டதாக ஈரான் அறிவித்துள்ளது. ஈரான் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜெனரல் ஹமித் ஹர்கலி கூறுகையில், ஈரானின் இராணுவ மின்னணு தொழில்நுட்பப் பிரிவினர், தங்கள் வான்எல்லைக்குள் ஒரு ஆளில்லாத விமானம் ஊடுருவ முயற்சி செய்வதை கண்டுபிடித்தனர். அந்த விமானத்தின் இயக்கத்தை மின்னணு வல்லுநர்கள் கட்டுப்படுத்தி சிர்ஜான் நகரில் உள்ள இராணுவ மையத்துக்கு கொண்டு வந்துள்ளனர் என்றார். பிடிபட்டது அமெரிக்க விமானமா? என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கவில்லை.

# கிராமிய மட்டத்தில் கல்விச் செயற்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டும்

## கல்விச் சமூகத்திடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி நிலை குறித்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மாவட்டங்களில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்கள் தொடர்பாகவும், வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடசாலைகளினது விபரங்கள் தொடர்பிலும் அமைச்சர் கல்வி துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், பாடசாலைகளில் கற்றல் செயற்பாட்டு நேரங்களில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டாமெனவும், எமது பகுதியின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் வகையில் பாடசாலை சார்ந்த நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டுமென அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நகர்புற பாடசாலைகளில் கல்வி மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தாது கிராமப்புற பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பிலும் துறை சார்ந்தோர் கவனம் எடுக்க வேண்டுமென்பதுடன், பாடசாலைகளின் பௌதீக வளங்களை நிறைவுசெய்யும் பொருட்டு அவற்றின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் எதிர்காலங்களில் துறைசார்ந்தோரிடமிருந்து உரிய ஆலோசனைகள் பெறப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

இதனிடையே ஆசிரிய நியமனங்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது இடமாற்றங்கள் மற்றும் இடமாற்றத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், விசேட தேவையுடைய மாணவர்களது கல்வி நடவடிக்கைக்கான ஆசிரியர் நியமனம், பாடசாலைகள் தோறும் ஆரம்பப் பிரிவுகளில் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர்களையும், மேற்பிரிவில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு தகுதியான ஆசிரியர்களை நியமிக்க விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அமைச்சர் பாடசாலை. மாணவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாத வகையில் அவர்களை கண்காணிக்கும் வகையில் பாடசாலை சமூகம் முன்னெடுக்க வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியதோடு எதிர்காலத்தில் இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந்தவர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கி வளமானதொரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

யுத்தகாலத்தின் போது இழந்த கல்வியை எமது மாணவர்கள் ஈடுசெய்யும் வகையில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கல்வி கட்டமைப்புக்களை பாதுகாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பாடசாலைகளிலிருந்து பல்வேறு காரணங்களால் இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, 15 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக் கல்வியை முன்னெடுப்பதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஆறுதல் நிறுவன பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோருடன் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நெடுந்தீவு தவிசாளர் நன்றி தெரிவிக்கிறார்

நெடுந்தீவு பிரதேசசபை எலலைக்குட்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது. இந்த உற்சவத்தில் பெருமளவான இலங்கை, இந்திய யாத்திரிகர்கள் வருகை தந்து உற்சவத்தை சிறப்பித்திருந்தனர் இவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் பல நிறுவனங்கள் உதவிபுரிந்தன. இந்த நிறுவனங்களுக்கு நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளர் தானியேல் றெக்சியன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வுக்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பல ஒழுங்குகளை செய்து தந்திருந்ததோடு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் இணைந்து நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுத் தந்திருந்தார். வருடாவருடம் நடைபெறும் இந்நிகழ்வுக்கு இவ் ஒழுங்குகளை அமைச்சர் மேற்கொண்டு வருவது குறிப்பிடப்பட வேண்டியதும், நன்றி கூறப்படவேண்டியதுமான விடயமாகும் என்றும் அவர தெரிவித்தார். மேலும குறிப்பாக இன்நிகழ்வை சிறப்பாக நடாத்துவதற்கு சகல ஒழுங்குகளையும் மேற்கொண்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் இந்த நிகழவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியளித்த படை அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

## இடமாற்றத்தால்...

உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விசாரணைகளின் பின்னர் இதன் விபரங்களைத் தமது கொழும்புத் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு இந்த ஆசிரியர்களின் இடம்மாற்றம் தொடர்பாக சுமூகமான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (பா)

## நாய்...

கொள்ளுமாறும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர். இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2010/2011 ஆம் ஆண்டுகளில் 30 பேர் நாய்க்கடிக்கு இலககாகி மரணித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு 16 பேரும் 2011 ஆம் ஆண்டு 14 பேரும் நாய்க்கடிக்கு இலக்காகி மரணித்துள்ளனர். 2010 ஆம் ஆண்டு அம்பாறையில் ஒருவரும், மட்டக்களப்பில் ஐவரும், திருகோணமலையில் இருவரும் பலியாகியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒன்பது பேரும் மரணமடைந்துள்ளனர். வடக்கைப் பொறுத்தவரையில் 2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா இருவரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தலா ஒருவரும் மரணமடைந்துள்ளனர். 2011 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் ஒருவரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருவரும் மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

## சிவில்...

இதற்கு விளக்கமளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

மக்கள் இங்கு சந்தோசமாக இருப்பதாக இராணுவத் தளபதி கூறியிருக்கின்றார். நிலங்களை பறித்து விட்டு, வீடுகளை விட்டு துரத்திவிட்டு மக்கள் எல்லோரும் சந்தோசமாக இருக்கின்றார்கள் எனக் கூறுவது கடைந்தெடுக்கப்பட்ட முட்டாள்தனமான பொய். மக்கள் சந்தோசமாக இருக்கிறார்களா, துக்கமாக இருக்கிறார்களா என்பது பற்றி இராணுவத் தளபதி தெரிவிக்க முடியாது.

இராணுவத் தளபதிக்கு துப்பாக்கிகளைப் பற்றியும் வெடிகுண்டுகளை பற்றியுமே தெரியும். மக்களைப் பற்றி அவருக்குத் தெரியாது. ஒருவேளை இராணுவத் தளபதியை வீட்டைவிட்டு வெளியேற்றினால் அவரால் சந்தோசமாக இருக்கமுடியுமா என்பதை அவர் முதலில் கூறவேண்டும். எனவே இராணுவ விடயங்களை பேசுவதற்கு குறித்தொதுக்கப்பட்ட இராணுவப் பேச்சாளர் உள்ளார்.

எனவே அரசியல்வாதிகளைப் போல் பேசுவதை இராணுவத் தளபதி முதலில் நிறுத்தவேண்டும். காணி அமைச்சர் கூறுகின்றார் 2014 ஆம் ஆண்டு வடக்கில் இராணுவத்தினரின் முகாம்கள் அமைநதுள்ள பொதுமக்களின் நிலங்கள் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்படும் என உறுதியளித்திருக்கின்றார். ஆனால் இராணுவத் தளபதி மக்களுடைய நிலத்தை வழங்க முடியாதெனக் கூறியிருக்கின்றார். எனவே நாம் எதை நம்புவது? எனவே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால், இராணுவம் தன்னுடைய வேலையை பார்க்கவேண்டும். காணிகளை எடுப்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டியவர்கள் மக்களும், பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளுமே தவிர இராணுவத் தளபதி அல்ல. இந்த வகையில் மீண்டும், மீண்டும் மக்களுக்கு நிலத்தை வழங்க முடியாதென இராணுவத்தளபதி கூறும் கருத்துக்கள், வடமாகாண நிர்வாகத்திலும், சிவில் விடயங்களிலும் அதீதமான இராணுவத்தின் தலையீடுகள் இருப்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

எனவே இராணுவத் தளபதியின் கூற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது. மக்களுடைய நிலத்தில் இருந்துகொண்டு அதைக் கொடுக்கமாட்டோம் என முட்டாள்தனமாக இராணுவத் தளபதி பேசமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

## இராணுவ...

உள்ளீர்ப்புச் செய்த சம்பவம் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னடுக்கப்படுவதாக அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வெளிநாட்டுப் பிரஜை ஒருவருக்கு இலங்கை இராணுவத்துக்குச் சொந்தமான பல புகைப்படங்களை வழங்கியவர் வவுனியாவில் இயங்கும் வெளிநாடொன்றைச் சேர்ந்த அமைப்பின் முக்கியஸ்தர் என்பதும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவருவதாகவும் அந்தச் செய்திகள் கூறுகின்றன.

## கிழக்கில்...

துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவ்விருவரும் வெளிநாட்டுக்கு செல்வதற்காகவே காரை கடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சுற்றிவளைப்புத் தேடுதலில் நூற்றுக் கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## கண்டனம்...

அவர், சிரியா, இஸ்ரேல் மற்றும் வடகொரியாவில் நிலவும் மனித உரிமைகள் சூழல் குறித்துக் கவலை வெளியிட்டார். இலங்கை அரசு தான் அமைத்த படிப்பினைகள் மற்றும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளைக்கூட முழுமையாக அமுல்படுத்தவில்லை என்று கூறிய அவர், இந்த ஆண்டு அமெரிக்கா மீண்டும் ஒரு தீர்மானத்தை முன்மொழியும் என்றார்.

கடந்த ஆண்டு மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது, இலங்கையில் இருக்கும் சிவில் உரிமைக் குழுக்கள் களத்தில் தமது பணிகளை முன்னேடுக்க உத்வேகமளித்தது. இந்த ஆண்டும் அமெரிக்கா மற்றொரு தீரமானத்தை இந்த சபையில் முன்மொழியவுள்ளது. இலங்கையில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து சர்வதேச சமூகம் கண்காணிக்கிறது என்பதை உறுதிப்படுத்தவும் நல்லிணக்கப்பாட்டை காண்பது மற்றும் பொறுப்புக் கூறல் விடயம் தொடர்பாக உதவிகளை வழங்குவது தொடர்பிலும் இந்தத் தீர்மானம் இருக்கும். இந்தத் தீர்மானம் இலங்கை அரசுடன் இணைந்த ஒரு கூட்டு முயற்சியாக இருக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது என்றார் சர்வதேச நிறுவனங்களுக்கான அமெரிக்காவின் துணைச் செயலர் எஸ்தர் பிரிம்மர்.


இலங்கை குறித்த தீர்மானம் மார்ச் மாதம் மதியப் பகுதியில்தான் விவாதத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம் பிரிட்டனின் சனல்-4 அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ள 'நே பயர் சோன்' திரைப்படத்தை ஐ.நா. வளாகத்திற்குள் திரையிடக்கூடாது என்று இலங்கைக் குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அப்படிச் செய்வது ஐ.நா. விதிகளை மீறுவதாக இருக்கும் என்று இலங்கை அதிகாரிகள் புகார் கூறியுள்ளனர்.

# மேலும் ஐவருக்கு டெங்குநோய்

கடற்படையினர் இருவர் உட்பட ஐவர் நேற்றும் நேற்று முன்தினமும் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஆனைக்கோட்டை, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து தலா ஒவ்வொருவரும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இருந்து இரண்டு கடற்படையினரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுடன் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் இம்மாதம் இதுவரை அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 69 ஆகவும் இந்தவருடத்தில் இதுவரை அந்த எண்ணிக்கை 128 பேராகவும் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# பாடசாலை பேருந்து சேவை நெடுந்தீவில் ஆரம்பிக்க ஏற்பாடு



நெடுந்தீவில் பாடசாலை பேருந்துச் சேவையை ஆரம்பிப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜசிந்தாராணி அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போதே நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், தீவக வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக கூடிய கவனமெடுத்து ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரியில் நிலவும் நடன ஆசிரியருக்கான வெற்றிடத்தை கவனத்தில் கொண்டு ஒருவார காலத்தில் நடன ஆசிரியர் நியமிக்கப்படுவதுடன், ஏனைய பாடங்களான விஞ்ஞானம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களும் விரைவில் நியமிக்கப்படுவார்கள்.

தீவகத்தில் மாணவர்கள் தமது குடும்ப வறுமை காரணமாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவதை தவிர்த்து தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். நெடுந்தீவில் கற்பிக்கின்ற கூடுதலான ஆசிரியர்கள் வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனினும் உளப்பூர்வமான பங்களிப்புடன் கற்பிப்பது பாராட்டிற்குரியது. அவ்வாறே மாணவர்களும் ஆசிரியர்களிற்கும், மூத்தோரிற்கும் மதிப்பளித்துச் செயற்பட வேண்டும்.

இந்நிகழ்வில், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளருமான தானியல் றெக்சியன் (றஜீவ்), ஈ.பி.டி.பி.யின் புங்குடுதீவு பிரதேச இணைப்பாளர் ஐயாக்கிளி சிவநேசன்(நவம்), அருட்தந்தை தாவீது, நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் அரியநாயகம் மற்றும் பாடசாலைச் சமூகம், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (69)

# புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

பொலிஸ் புதிய ஊடக பேச்சாளராக பொலிஸ் துறை விசாரணை பிரிவுப் பணிப்பாளராகப் பணிப்புரிந்த ஜீ.எம்.எச்.பி சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், இதுவரையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய பிரஷாத் ஜயகொடி, பொலிஸ் விசாரணை பிரிவு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# காலாவதியாகிய அரிசி புறக்கோட்டையில் மீட்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தித் திகதி, காலாவதி திகதி மற்றும் விலை குறிப்பிடப்படாத 25 ஆயிரம் கிலோகிராம் பாஸ்மதி அரிசி, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் கைப்பற்றப்பட்டுள்ளது. புறக்கோட்டை, பழைய ஜோன் வீதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவை மீட்கப்பட்டதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட அரிசியின் பெறுமதி 40 இலட்சத்திற்கும் அதிகமென நுகர்வோர், அதிகாரசபை தெரிவித்துள்ளது. 25 கிலோகிராம் வீதம் 10 அரிசி மூடைகள் இதன்போது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அதில் உற்பத்திசெய்யப்பட்ட மாதம் மாத்திரம் எழுதப்பட்டிருந்ததாகவும் அதிகாரசபை குறிப்பிட்டது.

குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகாரசபை மேலும் குறிப்பிட்டது.

# அமெரிக்க உறவில் விரிசல்; விக்கிலீக்ஸ் எச்சரிக்கை

(வொஷிங்டன்)

இலங்கையின் யுத்தகால குற்றச்செயல்கள் குறித்து அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்துச் சென்றதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

போர்க்குற்றச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இலங்கை உரிய ஆர்வம் காட்டவில்லை . எனவும் அமெரிக்கா கருதியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை என அப்போதைய அமெரிக்கத் தூதுவர் பெற்றிசீயா புட்டினஸ் தெரிவித்துள்ளார்.

ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் படையினருக்கு எதிராக தாமே விசாரணை செய்யும் நடவடிக்கையானது சிக்கல்களை ஏற்படுத்தும்.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை நியமித்துள்ளார். எனினும் இந்த ஆணைக்குழுவின் பணிகள் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது, 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் மேலதிக தவணைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் வலியுறுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப் புலிகள் அதிகளவு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக பல்லைக்கழக ஆசிரியர் ஒன்றியமும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் சுட்டிக்காட்டியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த இரகசிய குறிப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். படையதிகாரிகள் மற்றும் ஆளும் கட்சியினருக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள காரணத்தினால் நிலைமைகள் மிகவும் சிக்கல் மிக்கவையாக மாறியுள்ளது.

# கிளிநொச்சியில் விபத்து; முதியவர் ஸ்தலத்தில் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதியில் நேற்று மதியம் 12.30 மணிக்கு இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்திற்கு நீதிமன்றத்திற்கும் இடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்போச் சந்தியை நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டு சென்றவர் மீது பிக்கப் ரக வாகனம் மோதி விபத்து இடம்பெற்றது.

சோமசுந்தரம் கனகராஜ் (வயது-73) வன்னேரிக்குளம் என்பவரே விபத்து நடந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர். இவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வாகனச் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# ஹலால் சான்றிதழை அரசே வழங்க வேண்டும்

## மீண்டும் கிளம்புகிறது சர்ச்சை

(கொழும்பு)

அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபை ஹலால் சான்றிதழை வழங்கும் உரிமையை அரசாங்கத்திடம் வழங்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜமயத் உலமா சபையின் தலைவர் தற்போது இந்த சான்றிதழ் வழங்குவதற்கு அரசாங்கத்தையும் இணைத்துக்கொள்ள தமது சபை கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டார். ஹலால் சான்றிழ் வழங்குவது தொடர்பில், பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபலசேனா எழுப்பிய சர்ச்சையைத் தொர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சங்கிலித் திருடன் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்க சங்கிலியை அறுத்துக் கொண்டு

தப்பிக்க முயன்ற இரு இளைஞர்கள் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று 2.30 மணியளவில் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை அளவெட்டி வீதியில் தனிமையில் வந்து கொண்டிருந்த பெண் ஒருவரின்

கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை உந்துருளியில் வந்து அறுத்துக்கொண்டு தப்பிக்க முற்பட்டபோது குறித்த இருவரும் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உடுவில் மற்றும் அளவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்

என்றும் கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும்

தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனா. (02)

# ஓட்ட வீராங்கனை திடீர் மரணம்

(கொழும்பு)

பாடசாலை விளையாட்டுப் போட்டியின்போது 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட 18 வயதான மாணவி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். அரனாயக்க உஸ்ஸபிட்டி யவில் உள்ள ரிவிசந்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மைதானத்தில் மயங்கி விழுந்த இந்த மாணவி மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை அரனாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

NALIN IT
புதிய வகை DELL LAPTOPS
மிக மிக குறைந்த விலையில்


C/2503
மேலும்பல தெரிவுகள்...
www.facebook/nalinit.com
NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD
195/2, Palaly road,Parameswara Junction, Jaffna.
TP-0212221121
0777667975

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.